2019 - இதழ் 09

இலவசம்

## புரட்டாதி - 2019

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2019 - இதழ் 09

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

**2019 - இதழ் 09**


## 4 ஆசீர்வதிக்கும் தேவன்

அவனை விடுவிக்கின்றார், உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கின்றார், மறுஉத்தரவு அருளுகின்றார், ஆபத்தில் அவனோடிருக்கின்றார், தப்புவிக்கின்றார்.

## 6 கிறிஸ்துவோடுள்ள உறவு

மனித உறவுகளுக்குள் நடைபெறும் விசேஷித்த விருந்துகள், சிறப்பான தினக் கொண்டாட்டங்கள் நல்லது. ஆனால் அஸ்திபாரம் அற்ற உறவின்மேல் கட்டப்படும் எந்த ஆக்கமும் நிலைநிற்க மாட்டாது.

## 11 பிரசங்கக் குறிப்புகள்

எங்கள் வாழ்க்கையின் கிரியைகள், அதாவது எங்கள் நடக்கைகள், எங்கள் உடைகள், எங்கள் பேச்சுகள், யாவும் பக்திவிருத்திக்கேற்றவைகளாக இருக்க வேண்டும்.

## 13 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


gtachurch.ca


**கிறேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி  13ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... புரட்டாதி 1, 5, 8, 9, 20, 22, 27, 30

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... புரட்டாதி 2, 5, 8, 9, 10, 20, 22, 26, 27, 28, 30

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி**
... புரட்டாதி 10, 11, 22, 23

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... புரட்டாதி 5, 18, 19, 23, 24, 25, 26, 30

**ஜெபத்தின் மேன்மை**
... புரட்டாதி 24, 25, 26

**நற்செய்தியை கூறுங்கள்**
... புரட்டாதி 4, 12, 16

**சகோதர சிநேகத்தில் நிலைத்திருங்கள்**
... புரட்டாதி 12, 13, 15, 17

**தேவனுக்கு பிரியமான வாழ்க்கை**
... புரட்டாதி 2, 3, 6, 7, 8, 14, 18, 20, 21, 27, 29

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**
... புரட்டாதி 3, 18, 23, 28

**பொறுமையோடு காத்திருங்கள்**
... புரட்டாதி 1, 8, 9, 12, 13, 15 , 19, 20, 25, 28, 29, 30

**தேவ நீதி வெளிப்படும்**
... புரட்டாதி 13, 28, 30

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**
... புரட்டாதி 3, 6, 7, 8, 12, 14, 15, 16, 21, 27, 29

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**
... புரட்டாதி 12, 13, 23

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**
... புரட்டாதி 7, 9, 13, 14, 16, 17, 23, 27


gtachurch.ca

# ஆசீர்வதிக்கும் தேவன்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

தேவன் ஆசீர்வதிக்கின்றவராய் இருக்கின்றார். அவரைச் சார்ந்து அவரில் நம்பிக்கையாயுள்ளவர்களுக்கு தாம் செய்யும் செயல்களை குறித்து கூறும்போது,

- **அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்.**
- **என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.**
- **அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்.**
- **ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.**
- **நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.**

இங்கு தேவன் கூறும் அவரின் ஆசீர்வாதங்களாவன;

அவனை விடுவிக்கின்றார், உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கின்றார், மறு உத்தரவு அருளுகின்றார், ஆபத்தில் அவனோடிருக்கின்றார், தப்புவிக்கின் றார், கனப்படுத்துகின்றார், திருப்தியாக்குகின்றார், தான் கொடுக்கும் இர ட்சிப்பை அவனுக்குக் காண்பிக்கின்றார்.

எவ்வளவும் பொய்யுரையாத தேவன் தமது வார்த்தையில் உண்மையு ள்ளவர் தாம் சொன்னதை செய்து தம்முடையவர்களைக் கைவிடாது பாதுகாக்கிறவராயுள்ளார்.

இத்தனை நன்மைகளை அவர் யாருக்கு செய்கின்றார்? உன்னதமான தேவனின் மறைவிலிருக்கிறவனுக்கே செய்கின்றார். அவன் சர்வவல்ல தேவனின் நிழலிலே தங்குகின்றான். தேவன் அவனைத் தம்முடையவன் என்று அறிந்திருக்கிறார். அவனைக்குறித்து கூறும்போது;

அவன் தன்னிடத்தில் வாஞ்சையாயிருக்கின்றான் என்றும் அவன் தன் நாமத்தை அறிந்திருக்கிறான் என்றும் அவன் என்னை நோக்கிக் கூப்பி டுவான் என்றும் அவனைக் குறித்து சாட்சி கூறுகின்றார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொன்னார், தான் என்னுடையவர்களை அறிந்தும் தன்னுடையவர்களால் அறியப்பட்டுமிருக்கிறேன், அவர்களுக் காக தன் ஜீவனையும் கொடுக்கிறேன் என்று அவரது நாமத்திற்காக

நீங்கள் காண்பிக்கும் அன்புள்ள பிரயாசத்தை மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.

தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம் மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களிடத்தில் நீடிய பொறுமையுள்ளவர யிருந்து அவர்களுக்கு சீக்கிரத்திலே நியாயம் செய்வார்.

கர்த்தரை நம்பி நன்மைசெய், தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய் ந்துகொள்.

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டு தல்களை உனக்கு அருள்செய்வார்.

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். உன் நீதியை வெளிச்சத்தை ப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்ப ண்ணுவார். கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு.

உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார், அவர்கள் சுத ந்தரம் என்றென்றைக்கும் இருக்கும். அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள். நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.

நீ தீமையை விட்டு விலகி, நன்மை செய், என்றென்றைக்கும் நிலைத் திருப்பாய்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லி உன் வாழ்வை அவ ரது கரத்தில் கொடுத்து அவரைப் பற்றிக்கொள்வாயானால் அவரே உன் தேவனாயிருந்து உனக்கு சகாயம் செய்து, உன்னை பாதுகாத்து நடத்துவார்.

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்போடு அழைக்கின்றேன்.**

நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும், இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்.

## கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# கிறிஸ்துவோடுள்ள உறவு

ஒன்றுக்கொன்று அடுத்ததாக இருந்த இரு ஊர்களில் ஆரம்ப நாட்களிலே வாழ்ந்த குடிமக்கள், ஒருவருக்கொருவர் உதவியாகவும், தங்கள் ஊரில் இருந்த சிறப்பு திறன்களை மற்றய ஊருடன் பகிர்ந்து, ஒருவருக்கொருவர் பாதுகாப்பாகவும் இருந்து வந்தார்கள். ஆனால் சில தசாப்தங்களாக, இருந்து வந்த நல்லிணக்கத்திலும் உறவிலும் சிறிய விரிசல் அடைய ஆரம்பித்தது. படிப்படியாக இந்த விரிசல், இந்த ஊர்களுக்கிடையிலே போட்டி மனப்பான்மையை உருவாக்கியது. இந்த போட்டி மனப்பான்மை எழுத்தில் இல்லாதிருந்த போதிலும், அவரவர் உள்ளத்திலே நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது. காலப்போக்கில், ஆரம்பத்திலிருந்த உறவை கெடுக்கும் அடிப்படைக்காரணிகளை இனங்கண்டு அவைகளை அகற்றிவிடுவதற்குப் பதிலாக, தங்கள் நல்லிணக்கத்தை மற்றவர்கள் காண வேண்டும் என்பதற்காக, இரு ஊர்களுக்கும் இடையில் விளையாட்டுப் போட்டிகளையும், வியாபார வைபவங்களையும் உருவாக்கி இவ்விதமாக இராஜ தந்திர (Diplomacy) முறையில் தங்கள் நல் உறவை வெளிக்காட்டினார்கள். ஆனால் அவர்களுடைக்கிடையிலே இருந்த முரணான மனப்பான்மையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

மனித உறவுகளுக்குள் நடைபெறும் விசேஷித்த விருந்துகள், சிறப்பான தினக் கொண்டாட்டங்கள் நல்லது. ஆனால் அஸ்திபாரம் அற்ற உறவின்மேல் கட்டப்படும் எந்த ஆக்கமும் நிலைநிற்க மாட்டாது. எடுத்துக்காட்டாக, “உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.” என்று தேவனாகிய கர்த்தர் கூறியிருக்கின்றார். பெற்றோரை குறித்த உண்மையான அன்பு உள்ளத்திலே இல்லாதிருக்கும் போது, அங்கே நல்லுறவு உடைக்கப்பட்டாயிற்று. அந்த உறவை சரிசெய்வதற்கு பதிலாக, வருடத்திலே ஒரு முறை, தந்தையர் தினம், தாயார் தினம் அல்லது இன்று என் பெற்றோரின் திருமண ஆண்டுவிழா என்று அந்த நாளை சிறப்பிப்பதால், தங்களை தாங்களே திருப்திப்படுத்திக் கொள்கின்றார்களே தவிர, பெற்றோரை குறித்த உண்மையான அன்பில் எந்த முன்னேற்றமும் வருவதில்லை. ஆனால் பெற்றோரை உண்மையாக நேசித்து அவர்களை அனுதினமும் விசாரிப்பவன், அந்த அன்பை இன்னும் சிறப்பிப்பதற்காக வருடத்திலே ஒரு முறை அன்னையர் தினம் அல்லது தந்தையர் தினம் என்று கொண்டாடுவது நல்லது.

கருப்பொருளாவது, இன்று பல மனிதர்களின் வாழ்விலே, ஒரு காரியத்தை குறித்த அடிப்படை அம்சம் அல்லது அதன் முதன்மையான நோக்கம் அற்றுப்போனதும், அதை ஏற்றுக்கொண்டு, தங்கள் மனதையும் வழிகளையும் சரிசெய்வதற்கு பதிலாக, “இல்லை! எல்லாம் நன்றாகத்தான் இருக்கின்றது” என்று மற்றவர்களுக்கு காண்பிக்கும்படியாக பலவிதமான இதர நிகழ்ச்சிகளை செய்து கொள்கின்றார்கள். ஒரு வேளை இதனால் மனிதர்கள் மத்தியிலே நன்மதிப்பு உண்டாகலாம் ஆனால் தேவனோ அவனவனுடைய இருதயத்திலுள்ளவைகளை ஆராய்ந்து அறிகின்றார்.

மனிதர்களுடைய வாழ்க்கையிலே, தேவனோடுள்ள இதயபூர்வமான உறவு அற்றுப் போகும் போது, ஏன் அப்படியாக நடைபெறுகின்றது என்று தங்கள் வாழ்வை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேவன் என்றும் மாறாதவர். அவர் அன்பு மாறாதது! அவர் இருக்கின்றவராகவே இருக்கி ன்றார். அதில் எந்த மாற்றமும் இல்லை. ஆகவே, மனிதன் தான் முன்பு இருந்த நிலையிலிருந்து எப்படி பின்னடைவு ஏற்பட்டது என்பதைக் குறித்து ஆராய்ந்து அறிந்து அவன் தான் முன்பு இருந்த நிலைக்கு திரும்புவது அவனுக்கு நல்லது. ஆனால் இன்று மனிதர்கள், நாகரீகம் என்ற போர்வையில், காலத்தோடு மாறிப்போகின்றார்கள்.

ஒரு மனிதனுடைய வாழ்விலே கிறிஸ்துவோடு உள்ள உறவு அற்றுப் போனபின்பு அவன் தன்னைக் கிறிஸ்தவன் என்று காண்பிக்கும்படிக்கு பல வெளிப்படையான காரியங்களை செய்து கொள்கின்றான். சிலர் வெளிப்படையான உலக ஆசீர்வாதங்களை மையமாக வைத்து, “பார் தேவன் என்னை இவ்வளவாய் ஆசீர்வதித்திருக்கின்றார்” என்று கூறி, தான் அதனால் கிறிஸ்தவன் என்று மற்றவர்களுக்கு காண்பித்துக் கொள் கின்றான். அவன் அணியும் ஆடைகளாலும், கழுத்திலே அணியும் நாடா க்களாலும், உண்ணும் உணவாலும், மற்றும் மயிரை வளர்ப்பதாலோ அல்லது சிரைப்பதாலோ ஒரு மனிதனுக்கு இரட்சிப்பு உண்டாவதில்லை. உலகத்திலே வேறு மார்க்கங்களைச் சார்ந்தவர்கள் வெளிப்படையாக அநேக காரியங்களை ஒழுங்கு முறைப்படி செய்து வருகின்றார்கள். இன்னும் பலர் கோடீஸ்வரராக இருக்கின்றார்கள். அவர்களுடைய ஆரா தனை ஸ்தலங்களும் நிரம்பி வழிகின்றன. எனவே வெளிப்படையான ஆசீர்வாதங்கள் எம்மை விசேஷித்தவர்கள் ஆக்குவதில்லை.

அப்படியானால் நாங்கள் எதனால் விசேஷித்தவர்களாக இருக்கின்றோம். தேவனுடைய ஊழியராகிய மோசே, தேவனாகிய கர்த்தரை நோக்கி: எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும் **நீர் எங்களோடே வருவதி னால்** அல்லவா? இப்படியே பூமியின்மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும் என்றான். (யாத்திராகமம் 33:13-15) ஆம்! தேவன் எங்களோடும், அவரு டைய பிரசன்னம் எங்கள் மத்தியிலும் இல்லாதிருந்தால் நாங்கள் செய் யும் எல்லா கிரியைகளும் விருதா.

இயேசு சொன்னார்: என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல,நீங்களும் என்னில் நிலை த்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங் கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்க ளால் ஒன்றும் செய்யக்கூடாது.(யோவான் 15:4-5)

தேவனுடைய கற்பனைகளை மனதார கைக்கொள்கின்றவன் இயேசுவில் நிலைத்திருக்கின்றான். அவன் இயேசுவில் நிலைத்திருந்தால், தன் வாழ்க்கையிலே கனி கொடுப்பான்.

இந்த கனி என்பது என்ன? இந்த உலக செல்வங்களால் நிறைந்திருப் பதா? பெரும் கல்விமான்களாக இருப்பதா? இல்லை! ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற் குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறை ந்தி ருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நட க்கவும் கடவோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொரு வர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம் என்று பரிசுத்த வேதாகமத்திலே காண்கின்றோம் (எபேசியர் 5:9, கலாத்தியர் 5:22-26).

கிறிஸ்துவோடு தொடர்புள்ளவனின் வாழ்க்கை அவரைப்போல மாற்ற மடையும். அந்த மாற்றம் உள்ளான மனிதனில் ஏற்படும் மாற்றம். அப்ப டியான மாற்றங்கள் ஒரு மனிதனில் ஏற்படும் போதே அவன், நாளுக்கு நாள் கிறிஸ்துவின் சாயலில் வளர்ந்து வருவான்.

ஒரு வேளை தேவன் தம்முடையவர்களுக்கு உலக கல்வி, செல்வம், பெயர், புகழை, இந்த உலகில் பெருகப் பண்ணலாம். ஆனால் உலக த்திற்குரிய காரியங்கள், ஒரு மனிதன் தேவனோடு கொண்டுள்ள தொட ர்பை நிர்ணயிப்பதில்லை, அவை தேவனோடு வாழும் மனிதனு டைய வாழ்வை கட்டுப்படுத்துவதுமில்லை.

யோபு என்னும் மனிதன், உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அதினால் அந்த மனுஷன் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான். இந்த உலக ஆசீர்வாதங்கள் நிறைந்தவனாக இருந்ததால் அவன் தேவ னுக்கு பயந்தவன் என்பது பொருளல்ல. அவன் சாத்தானால் சோதிக்கப் பட்டு, தனக்கிருந்த எல்லாவற்றையும் இழந்து போனான். யோபுவின் உள் ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் சாத்தான் அவனை வாதித்தான். அவன் ஒரு ஓட்டை எடுத்து, தன்னைச் சுறண்டிக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான். அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என் றாள். அவனுடைய நண்பர்களும் நீர் தேவனுக்கு எதிராக பாவம் செய் தீர் என்று அவனை மேலும் துன்பப்படுத்தினார்கள். ஆனால், இவையெ ல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறை சொல்லவுமில்லை. ஏனெனில், அவன் தேவனோடு கொண்டுள்ள உறவு (தொடர்பு) செல்வத்திலும் அந்தஸ்திலும் தங்கி இருக்கவில்லை. மாறா க உயர்வோ, தாழ்வோ அவன் எப்போதும் தேவனுக்குப் பயந்து மன தார அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு வாழ்ந்து வந்தான்.

அதுபோலவே, பவுல் என்னும் தேவ ஊழியர் தன்னுடைய வாழ்வைக் குறித்து கூறுகையில் "நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்த வன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெய ரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன், பக்திவை

ராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்தி ற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன். ஆகிலும், எனக்கு லாபமாயி ருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண் ணிக்கொண்டிருக்கிறேன் என்றார் (பிலிப்பியர் 3:5-8).

மேலும், இவ்வுலகத்தின் பிரபல்யமான பாடகர், அரங்கிற்கு வரும் போதும், அவரின் பாடல்களை கேட்கும்படி இலட்சக்கணக்கானோர் கூடி வருகின்றார்கள். அவர் மேடையில் வருவதற்கு முன்பாக, இசையா லும், அலங்காரத்தாலும் (மேடையமைப்பு, புகையடித்தல் போன்றவை) ரசிகர்களின் மத்தியிலே பரபரப்பையும், மயிர்கூச்செறிதலையும் ஏற்படு த்துகின்றார்கள். ரசிகர்களும், கரகோசத்தோடும், பெரும் சத்தத்தோடும், அவரை வரவேற்கும்படி ஆவலோடு காத்திருக்கின்றார்கள். அவரை கண் டதும், பரவசம் மிகுதியினால் சிலர் அழுது கொள்கின்றார்கள், சிலர் தங்களால் இயன்ற மட்டும் சத்தமிடுகின்றார்கள், இன்னும் சிலர் மயக்க மடைந்திருக்கின்றார்கள் என்று செய்திகள் வாயிலாக கேள்விப் படுகின் றோம். இன்று தேவனோடுள்ள தொடர்பை துண்டித்துவிட்டவர்களில் சிலர், மேற்கூறிய வண்ணமாக, மனிதர்களின் மனதிலே பரவசவத்தை ஏற் படுத்துவதால், தேவ பிரசன்னம் தங்களோடு இருக்கின்றது என்று கூறிக் கொள்கின்றார்கள். தேவன் ஆவியாயிருக்கின்றார், தேவனை தொழுது கொள்கின்றவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்.

## கூடும் ஜனத்தொகையும், இடாம்பீகரமான மேடைகளும், மிருதுவான இசைக்கருவிகளும், மேடை அலங்காரங்க ளும், மயிர்கூச்செறிதலும், எங்களை கிறிஸ்தவர்கள் என்று நிர்ணயிப்பதில்லை.

கிறிஸ்துவின் ஆவியை உடையவனே கிறிஸ்தவன். அவன் கிறிஸ்துவின் பிரமாணத்தி ன்படி வாழ்பவன். உயர்வோ, தாழ்வோ, வாழ்வோ, சாவோ எந்நிலை யோ, தேவனை துதிக்கும் துதி எப்போதும் அவன் வாயிலிருக்கும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எழுந்தருளிய பின்பு, அவர்களுடைய சீஷர்கள் வாக்களிக்கப்பட்ட தேவனுடைய ஆவியை பெற்று தேவனுக்கு சாட்சியாக வாழ்ந்து வந்தார்கள். மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்ல மைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், கிறிஸ்து யார் என்பதையும், கிறிஸ்து எங்களோடு இருக்கின்றார் என்பதையும் தங்கள் வாழ்வின் கனிகளால் காண்பிப்பது அவர்களுக்கு கடினமாக இருக்கவில்லை. மற்றய மனிதர்கள் கிறிஸ்துவை அவர்களில் கண்டதால், அவர்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்தார்கள். கிறிஸ்துவின் சாயல் அவர்களது வாழ்க்கை வழியாக வெளிப்பட்டது. கிறிஸ்துவின் அச்சடையாளங்களை தங்களில் பதித்துக் கொண்டார்கள். ஆனால் காலங்கள் கடந்து செல்லும் போது,

sttachurch.ca

கிறிஸ்துவின் தொடர்பை இழந்து போன மனிதர்கள், கிறிஸ்து யார் என்பதையும், தேவனுடைய ஆவி தங்களில் இருப்பதையும் தங்கள் வாழ்க்கை வழியாக காண்பிக்கமுடியவில்லை. இதனால், தேவன் வெறுக்கின்ற, விக்கிரக ஆராதனைக்கு மனிதர்களை வழிநடத்தினார் கள். ஒரு சொரூபத்தை செய்து இவர்தான் இயேசு என்றார்கள். பிரமா ண்டமான கட்டிடங்களை அமைத்து இயேசு அங்கே இருக்கின்றார் என்று ஜனங்களை கிறிஸ்துவைவிட்டு தூரப்படுத்துகின்றார்கள். பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து மரித்துப்போன மனிதர்கள் வழியாக இயேசுவை கண்டடையலாம் என்று மனிதர்களை ஆராதிக்கும்படி கற்றுக் கொடுக்கின்றார்கள். ஏனெனில் கிறிஸ்துவோடுள்ள தொடர்பை இவர்கள் விட்டுவிட்டதால், வேறு கிரியைகளால், தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று காண்பிக்க முயற்சி செய்கின்றார்கள்.

இயேசு சொன்னார்: நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். எனவே நாங்கள் இயேசு கிறிஸ்துவோடு தொடர்புள்ளவர்களாக இருந்தால், எங்கள் வாழ்க்கையின் கனிகள் அதை உறுதிப்படுத்தும்.

மேலும் இயேசு கூறுகையில், என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்.

## இயேசு சொன்னார்: என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.

ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியு ண்டு உலர்ந்து போவான் அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள் வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

பிரியமானவர்களே, இரட்சகராகிய இயேசு உங்களுக்கு தூரமானவர் அல்ல. உங்கள் அறைவீட்டிற்குள் முழங்காற்படியிட்டு, உங்கள் உள்ளத்தை அவரிடம் கொடுங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர் உங்களை வழிநடத்திச் செல்வார்.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்களை வழிநடத்துவாராக! ஆமேன்.**

# புரிசுத்த ஆவியானவருக்கு மட்டும் இடமுண்டு

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

**பிரதான வசனம் :** எபேசியர் 4:27

எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் இயேசுவின் நாமம். அவருடைய நாமம் எல்லா பாவ சாபங்களுக்கும் மேலான நாமம். இம்மையிலே மாத்திரம் அல்ல மறுமையிலும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமம். எங்களுடைய எல்லா பிரச்சனைகள் யாவற்றிற்கும் மேலான நாமம் இயேசுவின் நாமம். நாம் யாவரும் அவருடையவர்களாயிருக்கின்றோம். எனவே நாங்கள் ஜெபம் செய்யும்போது, உம்முடைய நாமத்தின் மகி மையை எங்கள் மத்தியிலே விளங்கப் பண்ணும் என்று ஜெபம் செய்ய வேண்டும்.

நாங்கள் தேவனுடைய ஜனங்களாக இருக்கின்றோம். எனவே எங்கள் வாழ்க்கையில் பிசாசானவனுக்கு இடமில்லை. பரிசுத்த வாழ்க்கை என் பது நாங்கள் தேவனுக்கென்று வேறு பிரிக்கப்பட்டு, அவரோடு வாழும் வாழ்க்கை. பரமபிதா கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வழியாக தம்மு டைய கிருபையை இந்தப் பூமியிலே விளங்கப்பண்ணினார். எங்கள் பாவங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டு, நாம் பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்கென்று வேறு பிரிக்கப்பட்டோம். தேவனு டைய சுவிகார புத்திரர் ஆக்கப்பட்டோம். நாங்கள் சீர்பொருந்தி, பூர ணராகும்படிக்கு தேவ கிருபையை எல்லா புத்தியோடும் ஞானத்தோடும் எங்களில் பெருகப் பண்ணினார். அதற்காக சிலரை அப்போஸ்தலராக வும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். ஆதலால் நாங்கள் இனி மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போத கமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிற வர்களாயிராமல், நாங்கள் பரிசுத்தவான்களாக கிறிஸ்துவின் அஸ்திபா ரத்தின் மேல் கட்டப்பட வேண்டும்.

நாமோ பெரிதான கிருபையை பெற்ற தேவ ஜனங்கள், தேவனுடைய ராஜ்யத்திற்கென்று அழைக்கப்பட்டவர்கள் எனவே "பிசாசுக்கு இடங் கொடுக்காமலும் இருப்போம்". அதாவது, மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நாங்கள் இனி நடவாமலிருப் போம். தேவனை அறியாதவர்களோ உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகார த்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்.

இன்றைய நாட்களிலே, தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்டவர்கள் என்று கூறும் சிலர், காலங்கள் கடந்து செல்லும் போது, தாங்கள் விட்டு வந்த பழைய வாழ்க்கையிலிருந்த மாம்ச இச்சைகளை, அசுத்தங்களை

நிறைவேற்றுவதற்கு, வேதத்திலே ஏதாவது வசனங்கள் இருக்கின்றதா என தேடுகின்றார்கள். இது மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற் கேதுவான தந்திரமுமுள்ள போதனை.

ஆண்டுகள் கடந்து செல்லும் போது மனிதர்களுடைய பெலன் குறை ந்து போகின்றது. மட்பாண்டமாகிய இந்த சரீரத்திலே தேவனுடைய மகிமையான பொக்கிஷத்தை நாங்கள் பெற்றிருக்கின்றோம். அந்த மகிமையான பொக்கிஷத்தை இழந்து போகாதபடிக்கு வஞ்சகமான காரி யங்களைக் குறித்து விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். பிசாசா னவன் எங்கள் வாழ்க்கையில் வரும் போது, சமாதானத்தை கொண்டு வருபவனைப்போல, போலியான வேஷத்தோடு வருவான். அவன் கொல் லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந் தேன் என்று இயேசு கூறியிருக்கின்றார்.

பிசாசானவனுக்கும் எனக்கும் பங்கில்லை ஆனால் அவன் சும்மா வந்து போகின்றான் என்று கூறாது, அவனையும் அவனுடைய எந்தவிதமான கிரியைகளையும் உங்கள் வாழ்வில் அனுமதிக்காதிருங்கள். அவனுக்கு சொந்தமான எந்தக் காரியத்திற்கும் உங்களுக்குள்ளோ, உங்கள் வீடு களுக்குள்ளோ இடங்கொடாதிருங்கள்.

பரிசுத்த ஆவியாவனர் என்னிடம் இருந்து எடுத்து உங்களுக்கு கொடு ப்பதால் அவர் என்னை மகிமைப் படுத்துவார் என்று இயேசு கூறினார். இயேசுவை மகிமைப் படுத்தாத எந்த காரியமும். பிசாசானவனுடை யதாக இருக்கின்றது. மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்த னமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையுமாகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய் தலே தகும். விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறி ஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர் களே. இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளை கள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள்.

மற்றவர்கள் அப்படிச் செய்கின்றார்களே, நாங்கள் செய்தால் என்ன என்று வழி விலகிப் போகாமல், உங்கள் வாழ்க்கையில் பிசாசானவனு க்கு ஒரு சிறிய இடத்தையும் கொடுக்காதிருங்கள்.

பரிசுத்த ஆவியானவருக்கு மட்டுமே என் வாழ்க்கையில் இடமுண்டு என்று உறுதியாய் நிலைத்திருங்கள்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்

இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)

தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

# மகிமை நிறைந்த வரவேற்பு

நாட்டின் அதிகாரிகள், செல்வாக்குமிக்கவர்கள், கல்விமான்கள், விளையாட்டு நட்சத்திரங்கள், மற்றும் பிரபல்யமானவர்கள் யாவரும் வைபவங்களிலே சிறப்பு விருந்தினராக, கௌரவமாக வரவேற்கப்படுகின்றார்கள். இவ்வண்ணமாக மனிதர்கள் தங்கள் கனத்தை விருந்திருனருக்கு தெரியப்படுத்துகின்றார்கள். வரவேற்கப்படுகின்ற விருந்தினரும் அதனால் மனத்திருப்தி அடைகின்றார்கள். இவை யாவும் இந்த உலகத்திற்குரியவைகளும், மனிதர்களுடைய ஏற்பாடுமாயிருக்கின்றது. இதை சில மனிதர்கள் நாடித் தேடுகின்றார்கள். எப்போதும் கனம்பொருந்தியவர்களாக வாழ விரும்புகின்றார்கள். இவை இன்று தேவ ஜனங்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள் மத்தியிலும் பரவலாக காணப்படுகின்றது. அது மட்டுமல்லாமல், கனத்துக்குரியவர்கள் இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்லும் போதும், பெரிதானதாயும் உலக மகிமை நிறைந்ததுமான பிரியாவிடையுடன் அவர்களின் இறுதிக் கிரியைகள் நடாத்தப்படுகின்றது. நாட்டிற்கு, மக்களுக்கு சேவை செய்தவர்களை கனப்படுத்துவதில் தவறு ஏதும் இல்லை. இவ்வண்ணமாக எங்களுக்கு கிடைக்கும் வரவேற்பில் நாங்கள் திருப்த்தியடைந்து விடக்கூடாது. ஒருநாள் நாங்கள் யாவரும் இக் கரையை நாங்கள் தாண்டி அக்கரைக்கு செல்லும் நேரம் வரும். அந்த வேளையிலே எப்படிப்பட்ட கனம் இந்த உலகத்திலே கிடைக்கும் என்று தெரியாது. பல தேவ பிள்ளைகள் இந்த உலகத்திலே பிறந்ததையும், வாழ்ந்ததையும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டதையும் நாங்கள் அறியாமல் இருக்கின்றோம். தேவனுடைய ஊழியர்களில் பலர், கடும் உபத்திரவங்கள் மத்தியிலே இரத்த சாட்சிகளாக மரித்து இக்கரையைவிட்டு சென்றிருக்கின்றார்கள். இந்த உலகின் மகிமையை அவர்கள் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. அந்த வான் கரையில், எங்கள் நேசர் இயேசு, எங் களை நோக்கி: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்னும் வார்த்தையை கேட்பதே மகிமை நிறைந்த வரவேற்பாக இருக்கும்.

**மத்தேயு 25:34**

வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்.

**ஜெபம்**: மகிமை நிறைந்த தேவனே, இந்த உலகத்தின் மகிமையை நாடித் தேடாமல், அழியாத நித்திய மகிமையை நாடி, அந்நாளிலே அதை பெற்றுக் கொள்ளும்படி வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒரே சரீரம் பல அவயவங்கள்

ஆதி அப்போஸ்தலர்களின் ஊழிய நாட்களிலே, சீஷர்கள் பெருகின போது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, குறைவு உண்டாயிற்று. அப்பொழுது பன்னிரு அப்போஸ்தலரும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வசனத்தைப் போதிக்கும் பணியைவிட்டு வேறு விடயங்களை செய்வது ஏற்புடையதல்ல என்று கூறி, உதவி ஊழியத்திற்காக பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்த, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை இந்த வேலைக்காக நியமித்தார்கள். அதாவது, இந்த பந்தி விசாரிக்கும் ஊழியம் தங்கள் தராதரத்திற்கு கீழானது என்று அவர்கள் தங்களுக்குள் பெருமையடைந்து, தங்கள் நிலையை அவர்கள் உயர்த்தவில்லை. மாறாக கர்த்தராகிய இயேசு தங்களுக்கு கொடுத்த திருப்பணி எதுவோ அதை தாங்கள் நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். இவ்வண்ணமாக, அப்போஸ்தலர், ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருந்தார்கள். அதுபோல விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்பையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும், நிக்கொலாவையும் உதவி ஊழியத்தை செய்து வரும்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக்கி, அவரவர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தை கருத்தோடு செய்து வந்தார்கள். தேவவசனம் விருத்தியடைந்தது, சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று. ஒரு சரீரத்திலே பல அவயவங்கள் வித்தியாசமான தொழிற்பாட்டோடு இருப்பது போல, கிறிஸ்துவின் சரீரமான சபையிலும், வரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கின்றது. முன்னறிந்து அழைத்த தேவன், தாயின் கருவிலே உருவாகும் முன்னே, தம்முடைய பணிக்காக எங்கள் ஒவ்வொருவரையும் வேறுபிரித்தெடுத்திருக்கின்றார். அடுத்த கட்டம் என்ன என்று எண்ணிக் கொள்ளாமல், நாங்கள் இப்போது பெற்ற பணியை நிறைவேற்றி தேவனுடைய பார்வையிலே உத்தம ஊழியர்களாக விளங்குவோம்.

**1 கொரிந்தியர் 12:12**

எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம் ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.

**ஜெபம்**: அழைத்த தேவனே, நான் உம்மிடத்தில் பெற்ற பணி உலக பார்வையிலே சிறிதானதாகவோ அல்லது பெரிதானதாகவோ இருந்தாலும் அதை மனதார நிறைவேற்றி முடிக்கும் மனப்பக்குவத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஸ்தேவான்

பந்தி விசாரிப்பின் பணிக்காக தேவனால் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர் ஸ்தேவான். இந்த உதவி ஊழியத்தை பெற்ற ஸ்தேவன், விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். அந்நாட்களிலிருந்த யூத மத ஆலயத்தை சேர்ந்தவர்களில் சிலர் இதனால் மிகவும் எரிச்சலடைந்தார்கள். அவர்களில் சிலர் எழும்பி, ஸ்தேவானுடனே தர்க்கம் பண்ணினார்கள். ஆனால், அவர் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற்போயிற்று. தங்களுடைய மதத்தின் அடிப்படையில் அவர்மேல் குற்றம் பிடிக்க வகை தேடினார்கள். அப்பொழுது அவர்கள்: மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக இவன் தூஷண வார்த்தைகளைப் பேசக்கேட்டோம் என்று சொல்லும்படியாக மனுஷரை ஏற்படுத்தி, ஜனங்களையும் யூத மதத்தின் மூப்பரையும் அவர்களின் வேத வல்லுனர்களையும் எழுப்பிவிட்டு அவன் மேல் பாய்ந்து, அவனைப் பிடித்து, ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுபோய், இந்த மனிதன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப்பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான் என்று பொய்சாட்சிகளை ஏற்படுத்தினார்கள். ஒருவரும் கெட்டு நரகத்திலே மாண்டு போகாமல் விடுதலையடையும்படி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீட்பின் நற்செய்தியை அறிவித்த ஸ்தேவானுக்கு இதுவே யூதர்கள் மத்தியிலே கிடைத்த வரவேற்பு. ஸ்தேவான் ஜனங்களுக்கு ஞான நன்மையை எடுத்துக் கூறினார், ஆனால் ஜனங்களோ அவருக்கு தீமை செய்ய ஆர்வமாய் இருந்தார்கள். அவர் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டு, மூர்க்கமடைந்து, அவர் மேல் பாய்ந்து, நகரத்துக்குப் புறம்பே தள்ளி அவரைக் கல்லெறிந்தார்கள். இதுவே இந்த உலகத்திலே அவருக்கு கிடைத்த பிரியாவிடை. ஆனால், அவரோ, வானங்கள் திறந்திருக்கிறதையும், இயேசு கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கின்ற பரலோகத்தின் அற்புதக் காட்சியையும் கண்டார். உலகத்தாரின் பார்வையிலே அவமானமடைந்தாலும், பரலோகத்திலே ஈடு இணையில்லாத மகிமையின் வரவேற்பு அவருக்கு கிடைத்தது.

**அப்போஸ்தலர் 7:56**

**அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகம் வெறுத்துத் தள்ளினாலும், நீர் உத்தம ஊழியன் என்று என்னை வரவேற்கும்படியான வாழ் க்கை வாழும்படியாக என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஊழியராகிய பிலிப்பு

அந்நாட்களிலே, உதவி ஊழியராக நியமிக்கப்பட்ட பிலிப்பு என்பவர் வழியாக தேவன் பெரிதான கிரியைகளை நடப்பித்து வந்தார். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு, கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேக திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து. ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந்தான். ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார் அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச்சேர்ந்து, வேத வாக்கியங்களை அந்த மந்திரிக்கு விளக்கிக் கூறினார். இயேசுவைக்குறித்து மந்திரிக்கு பிரசங்கித்தான். அந்த மந்திரி இயேசுவின்மேல் விசுவாசம் கொண்டதால், தன்னை ஞானஸ்நானத்துக்கு ஒப்புக் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான். பிலிப்பு என்பவரை ஆவியானவர் வேறு இடத்திற்கு கொண்டு போனார். அவ்விடத்திலிருந்து பிரயாணம் பண்ணி செசரியாவுக்கு வருகிற வரையில் சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டு வந்தான். பிரியமானவர்களே, கர்த்தருடைய ஆவியானவரின் செயல்களை எவருமே மட்டுப்படுத்த முடியாது. நாங்கள் தேவ சித்தத்திற்கு எங்களை பூரணமாக ஒப்புக் கொடுக்கும் போது, அவர் அதிசயமான வழிகளை திறந்து தருவார்.

**அப்போஸ்தலர் 8:4**

**சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்.**

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, இந்த உலகிலே என்னதான் நடந்தாலும் நான் உம்முடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழியாமையை நோக்கி...

ஸ்தேவன் கிறிஸ்துவின் இரத்த சாட்சியாக கொல்லப்பட்ட நாட்களில், அப்போஸ்தலராகிய பவுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இன்னும் அறியாதிருந்தார். அந்நாட்களிலே சபையிலே பெரிதான உபத்திரவம் உண்டாயிற்று. யூத மதத்தை சார்ந்த சவுல் (பின்பு பவுல் என்று அழைக்கப்பட்டவர்) வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான். இவர்கள் இந்த உலகத்தினால் உண்டான நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். ஆனாலும், இவைகள் ஒன்றும் அவர்களின் விசுவாசத்தை அவித்துப்போடவில்லை. கிறிஸ்துவின் நற்செய்தியின் நிமித்தம் சரீரத்திலே பல பாடுகளை அனுபவித்தாலும், அவர்களுக்குள்ளே மிகுந்த சந்தோஷம் உண்டாயிருந்தது. எந்த மனிதர்களும், எந்த உலக கிரியைகளும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட திருப்பணியை நிறுத்த முடியவில்லை. வேதத்தில் எழுதியபடி "கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள் நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்." இந்த நிச்சயத்தையுடையவர்களாய், தாங்கள் பெற்றுக் கொண்ட நற்செய்தியை துரத்துண்டிருந்த இடங்களெல்லாம் அறிவித்தார்கள். எனவே, இந்த உலகிலே உங்களைச் சூழ நடைபெறும் சம்பவங்களையும், விசுவாசத் துரோகங்களையும் கண்டு சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை நடப்பியுங்கள். இயேசு கிறிஸ்து வழியாக நித்திய வாழ்வு உண்டு என்று, பெற்ற நற்செய்தியை அறிவியுங்கள்.

**1 கொரிந்தியர் 15:53**

அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளவேண்டும்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, இந்த உலகத்தைக் கலக்கும் பயங்கரங்களை கண்டு நான் மருளாதடிக்கு, உம்முடைய திருவசனத்தை கூறும்படிக்கு பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்கள் சுபாவங்கள்

ஆதி அப்போஸ்தலருடைய நாட்களிலே, யோப்பா என்னும் பட்டணத்தில் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சிஷ்ஷி, நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அப்பொழுது, அப்போஸ்தலனாகிய சீமோன் பேதுருவை வரும்படி அழைப்பித்தார்கள். பேதுரு அந்த இடத்தில் சேர்ந்த போது, அங்கிருந்த விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவரைச் சூழ்ந்து நின்றார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்கள் முன் நிறுத்தினான். இந்த சம்பவத்திலே, தபீத்தாள் என்னும் ஸ்திரி அங்கிருந்த விதவைகளுக்கு, அவர்களின் தேவைகளை சந்திக்கும்படிக்கு தன்னால் இயலுமானதை செய்து வந்தாள். அந்த உதவி அவர்களுக்கு பெரும் ஆதரவாக இருந்தது. அதே நேரத்திலே உதவியைப் பெற்றவர்கள் அவளுக்கு நன்றியறிதலுள்ளவர்களாகவும் இருந்து வந்தார்கள். எல்லா நற்கிரியைகளும் தேவனிடத்திலிருந்து அனுக்கிரகம் செய்யப்படுகின்றது. நாங்கள் பெறும் ஞான நன்மைகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகின்ற அதேவேளையிலே, கருவியாக பயன்படுத்தப்பட்ட மனிதர்களுக்கும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். இவ்வண்ணமாக, தேவனுடைய நாமம் எங்கள் வழியாக, மனிதர்கள் மத்தியிலே மகிமைப்படும்படி திக்கற்றவர்களுக்கும், விதவைகளுக்கும், உதவி செய்வதும், எங்களுக்கு உதவி செய்தவர்களுக்கு நன்றியறிதலுள்ளவர்களாக இருப்பதும், எங்களுடைய சுபாவமாக மாற வேண்டும். பொருள் உதவி மாத்திரமல்ல, எங்கள் நன்றியுள்ள சுபாவமும் தேவனுடைய நாமத்திற்கு மகிமையை உண்டு பண்ணும்.

**மத்தேயு 5:16**

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

**ஜெபம்:** மகிமை நிறைந்த தேவனே, மற்றவர்களிடம் உதவியை பெறும் போது, அதை அனுக்கிரகம் செய்த உமக்கும், அதை நிறைவேற்றியவர்களுக்கும் மனதார நன்றி கூறும் சுபாவத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிதாவினிடத்தில் பலன் உண்டு

மற்றவர்களுக்கு உதவி செய்வதும், உதவி செய்தவர்களுக்கு நன்றியறிலுள்ளவர்களுமாயிருப்பது எங்களுடைய சுபாவமாக மாற வேண்டும் என்று பார்த்தோம். இவ்வண்ணமாக பல மட்டங்களிலே மனிதர்களின் சேவைக்காக அவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். தாங்கள் செய்த கிரியைகள் மக்கள் மத்தியிலே அங்கீகாரம் பெற்றுள்ளது என்று அறியும் போது, அந்த சேவைகளை செய்து வருபவர்களுக்கு புத்துணர்ச்சி உண்டாக்கின்றது. எங்களுடைய நோக்கம் மனிதர்களால் உண்டாகும் புகழ்ச்சியை தேடுவதாக இருக்காவிட்டாலும், சில வேளைகளிலே நாங்களும் மனிதர்கள் மத்தியிலே கௌரவிக்கப்படுவதை தவிர்க்க முடியாமல் போய்விடுகின்றது. அந்த வேளைகளிலே எங்களில் நற்கிரியைகளை உண்டாக்கும் தேவனை நாங்கள் கனப்படுத்த வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த சிந்தையும் இந்த செய்கையும் என்னில் உருவானது என்று அறிக்கை செய்ய வேண்டும். மற்றவர்களிடம் இருந்து பெறும் கனத்தினால் எங்களுக்கு மகுடங்களை நாங்கள் உருவாக்கிக் கொள்ளக்கூடாது. நாங்கள் காண்கின்ற உலகத்தின் கனத்தை நாடி வாழ்பவர்கள் அல்லர். நாங்கள் எங்கள் விசுவாசக் கண்களால் காணாத பரலோகத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றோம். இந்த உலகம் தரும் கனத்தை நாங்கள் மேன்மைப் படுத்தும் போது, அது எங்கள் வாழ்வில் கண்ணியாக மாறிவிடுகின்றது. தானதர்மங்கள் கிறிஸ்தவ வாழ்வில் முக்கியமானது ஆனால் அதனால் மாத்திரம் எங்கள் வாழ்க்கை கிறிஸ்துவின் சாயலை அடைவதில்லை. நாங்கள் முழுமனதோடு தேவனுடைய கற்பனைகளை கை கொள்ள வேண்டும். எங்கள் சிந்தை, சொல், செயல் யாவும் தேவனுடைய வார்த்தையின்படி அமையவேண்டும். இந்த உலகத்தில் உண்டாகும் நன்மதிப்பும், பெருமையும் தேவ சித்தத்தை குறித்த உணர்வை எங்கள் வாழ்க்கையில் அற்றுப்போகப் பண்ணிவிடும். வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நாங்கள் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோதரிக்கக்கடவோம்.

**மத்தேயு 6:2**

ஆகையால் நீ தர்மஞ் செய்யும்போது மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வது போல, உனக்கு முன்பாக தாரை ஊதுவியாதே.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, மனிதர்களால் உண்டாகும் கௌரவத்தினால் நான் பெருமையடைந்து என் வாழ்வின் பிரதானமான நோக்கத்தை மறந்து போகாதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சாந்த குணம்

ஆபத்து நேரத்திலே ஒரு அயலவனுக்கு ஒரு மனிதன் உதவி செய்தான். காலப் போக்கில், அவர்களுக்கிடையில் ஏற்பட்ட சில முரண்பாடுகளினால் ஒருவரை ஒருவர் வார்த்தைகளினால் தாக்கிக் கொண்டார்கள். உதவியை செய்தவன் மற்றவனை நோக்கி "நான் உன் ஆபத்து நேரத்திலே செய்த உதவியை மறந்த நன்றியற்ற மனிதனாக இருக்கின்றாய்" என்றான். உதவியைப் பெற்றவன், "நீ எனக்கு உதவி செய்திருக்காவிட்டால் கடவுள் இன்னுமொருவரை அனுப்பியிருப்பார்" என்றான். இந்த கடுமையான, வார்த்தைப் பிரயோகங்கள், அந்த மனிதர்களின் உள்ளத்தின் ஆழத்தில் இருக்கும் அகங்காரத்தை எடுத்துக் காட்டுகின்றது. தேவனாகிய கர்த்தர் தம்முடைய கிருபையை பல வழிகளினாலே எங்களுக்கு வெளிப்படுத்தி வருகின்றார். எனவே நாங்கள் எங்களைக் குறித்து மேன்மைபாராட்டாமல், தேவனுக்கு முன்பாக எங்கள் இருதயத்திலே தாழ்மையடைய வேண்டும். உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்று இயேசு கூறியிருக்கின்றார். அதே வேளையிலே கண்கண்ட மனி தன் வழியாக பெற்ற உதவியை அற்பமாக்குகின்றவன், கண்காணாத தேவனுக்கு எப்படி நன்றியறிதலுள்ளவனாக இருக்க முடியும்? எனவே எங்கள் இருதயத்தை கர்த்தருக்கு முன்பாக செம்மைப்படுத்த வேண்டும். அப்போது, இருதயத்திலிருந்து செம்மையான வார்த்தைகள் எங்கள் வாயின் வழியாக புறப்படும். எங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. எனவே, உதவியை பெற்றவனின் நன்றியற்ற வார்த்தைகள் உங்களை வேதனைப் படுத்தினால் அதை கர்த்தர் அறிந்திருக்கின்றார். உதவி செய்தவன் வாயிலிருந்து பெருமையான வார்த்தைகளால் உண்டாகும் மனவேதனையையும் கர்த்தர் அறிந்திருக்கின்றார். உதாரத்துவ குணமுள்ளவர்கள் இன்னுமாய் தாராளமாய் மன்னிப்பை அள்ளி வழங்குவதிலும், நன்மையை பெற்றவர்கள், இன்னும் அதிகமாக தங்கள் நன்றியைத் தெரிவிப்பதிலும் வளர்ந்து பெருக வேண்டும். எந்த வேளையிலும் எங்கள் வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் கர்த்தரையே உயர்த்துவோம்.

**பிலிப்பியர் 4:5**

உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

**ஜெபம்**: நீடிய பொறுமையுள்ள தேவனே, என் வார்த்தைகளை உமக்கு முன்பாக செம்மையுள்ளதாக காத்துக் கொள்ளும்படிக்கு, தாழ்மையுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பலவீன நேரங்களிலே...

பலவீனங்கள் தலை தூக்கும் போது, சோர்ந்து போய், தேவனை விட்டு இன்னுமாய் பின்வாங்கிப் போய்விடாதிருங்கள். தாவீது ராஜா தன்னுடைய வாழ்க்கையையும் தன்னுடைய பலவீனங்களையும், அதிலிருந்து தான் எப்படி விடுவிக்கப்பட்டது என்பதையும் வெளிப்படையாக சங்கீதமாக பாடியிருக்கின்றார். "என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார். துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன் அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாக்கி இரட்சிக்கப்படுவேன். மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது. பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்துகொண்டது. மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன் தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று." இப்படியாக தாவீது ராஜா கர்த்தரைச் சார்ந்து இருந்தார். ஒரு பிள்ளையானவன் தன் நெருக்கத்தின் வேளையிலே எப்படியாக தான் நேசிக்கும் தன்னுடைய தந்தையை கிட்டிச் சேரும் பிள்ளையைப் போல, எங்கள் பரம தந்தையிடம் நாங்கள் கிட்டிச் சேரவேண்டும். தம்முடைய குமாரனையே எங்களுக்காக கொடுத்தவர், அவர் இரக்கம் நிறைந்தவர். கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் (இயேசு) நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

**எபிரெயர் 4:15**

எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்

**ஜெபம்**: இரக்கம் நிறைந்த தேவனே, என்னுடைய பலவீன நேரங்களிலே, பாவம் செய்து நான் உம்மைவிட்டு இன்னமுமாய் தூரம் போகாதபடிக்கு உம்மிடமாய் என்னை இழுத்துக் கொள்ளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரம தந்தையிடம் செல்வோம்

தன் தந்தையிடம் தனக்கிருந்த சொத்துக்கள் யாவையும் எடுத்துக் கொண்டு, தந்தையைவிட்டுத் தூரமாகச் சென்று, துன்மார்க்க வழிகளிலே தன் ஆஸ்திகளையெல்லாம் அழித்துப் போட்ட இளைய குமாரனாகிய "கெட்ட குமாரன்" என்னும் உவமையை நாங்கள் அறிந்திருக்கின்றோம். அவன் ஒன்றுமில்லாதவனாய், யாருமில்லாதவனாய் தனித்து விடப்பட்டிருக்கையில், தனக்கிருந்த எல்லா சலுகைகளையும் நான் இழந்து போனேன் என்று தன் மனதிலே எண்ணினான். தனக்கு உரித்தான ஆசீர்வாதங்கள் யாவையும் தந்தை என்னிடம் தந்தார், ஆனால் நான் அவை யாவையும் முற்றாக அழித்துப் போட்டேன், இனி தந்தை வீட்டில் எனக்கு பங்கும் இல்லை பாகமும் இல்லை, இனி குமாரன் என்று அழைக்கப்படும் தகுதியும் எனக்கில்லை, எனினும் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதால், என்னை தன்னுடைய ஊழியர்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்வார் என்று அவன் நினைத்திருந்தான். அவன் தன் தந்தை வீட்டை நோக்கி புறப்பட்டு போனான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான். இளைய குமாரன் தன் பாவங்களையும் தன் பழைய வாழ்க்கையையும் குறித்து மனவருத்தமடைந்திருந்தான். ஆனால், தந்தையோ பழையவைகளை இனி எண்ணாமல், தன்னிடம் திரும்பி வந்திருக்கும், தன் குமாரனைக் குறித்து வெகுவாய் சந்தோஷமடைந்தார். குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று தன் மனந்திரும்புதலை தந்தைக்கு தெரியப்படுத்தினான். அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம் என்றார். மனந்திரும்புகின்ற இருதயத்தோடு தன்னிடம் சேருகின்றவர்களை ஒருபோதும் புறம்பே தள்ளாத பரம தந்தை எங்களுக்கு இருக்கின்றார். எனவே தாமதமின்றி எழுந்து புறப்பட்டு தந்தையிடம் விரைந்து செல்வோம்.

**லூக்கா 15:20**

எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்

**ஜெபம்**: மனதுருக்கமுடைய தேவனே, துரோகம் செய்துவிட்டேன் என்று என் வாழ்வை நானே அழித்துக் கொள்ளாமல், மனம்திரும்பி உம்மிடமாய் கிட்டிச் சேரும் உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரம தேசத்தின் பிரஜைகள்

எங்களுடைய நிரந்தரமான குடியிருப்பு இங்கு இல்லை. எங்கள் விசுவாசக் கண்களினால் காணும் பரம தேசத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றோம். எனவே, அந்த பரம தேசத்தின் பிரஜைகளுக்குரிய சுபாவங்களை தரித்தவர்களாகும்படி நாளுக்கு நாள் இந்தப் பூமிக்குரிய சுபாவங்களைக் களைந்து விண்ணவருக்குரிய சுபாவங்களை தரித்தவர்களாக மாறிக் கொண்டிருக்கின்றோம். பரலோகத்திற்குரியவர்களின் சுபாவங்கள் என்ன என்று எங்களிடம் கேட்கப்பட்டால், நாங்கள் அநேக காரியங்களை கூறிக் கொள்வோம். ஆனால் இன்று நாங்கள் அவற்றுள் ஒன்றைத் தியானிப்போம். நேற்றய நாளிலே கெட்டுப்போன இளைய குமாரனின் மனந்திரும்புதலைக் குறித்தும், பரம தந்தையின் உள்ளத்தைக் குறித்தும் பார்த்தோம். மனந்திரும்பி வீடு திரும்பிய குமாரனினால் அந்த வீடு விழாக் கோலம் பூண்டது. ஆனால், உண்மையும் உத்தமுமாய் தன் தந்தைக்கு கீழ் படிந்திருந்த மூத்த குமாரன், தன் அன்றாட கடமைகளை முடித்து, வேலையில் இருந்து திரும்பும் போது, நடந்த சம்பவத்தை கேள்விப்பட்டு, அந்த சந்தோஷத்திலே பங்கேற்க மனதில்லாதவனாய் இருந்தான். மூத்தவன் தந்தைக்கு ஏற்றவனாக வாழ்ந்து வந்தாலும், தந்தையின் உள்ளத்தை இன்னும் அறியாதவனாக இருந்தான். சில வேளைகளிலே நாங்களும் இந்த நிலைக்கு தள்ளப்படலாம். தேவனுடைய ஊழியத்திற்கு ஒத்தாசையாக பல பிரயாசங்களை செய்கின்றோம். ஏன்? நாங்கள் மட்டும் பரலோகம் செல்லும்படியாகவா? இல்லை ஒருவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடே செயற்படவேண்டும். நாங்கள் பரம தேசத்தின் பிரஜைகளுக்குரிய சுபாவமுடையவர்களாக வேண்டும் என்றால், கெட்டுப் போகின்றவர்கள் தேவனிடம் திரும்பும் போது, எங்கள் உள்ளத்தில் பேரானந்தம் பொங்கி வழிய வேண்டும். ஏனெனில் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று இயேசு கூறினார். எனவே எங்கள் பிரயாசங்களின் பலனை நாங்கள் காணும்போது, தேவனோடு இருக்கும் நாங்கள் தேவனைப் போல சந்தோஷமடைய வேண்டும்.

**லூக்கா 15:7**

மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**ஜெபம்**: கருணை நிறைந்த தேவனே, காலத்தை வீணாக்காமல், ஆதாயப்படுத்திக் கொள்ளத்தக்கதாக, நன்மை செய்யும் மனநிலையை எனக்கு தந்து உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இரட்சிப்படையும்படிக்கு...

கர்த்தராகிய இயேசு இந்த பூமியில் தம்முடைய திருப்பணியை முடித்து, அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது, அவர் எருசலேமு க்குப் போகத் தமது முகத்தைத்திருப்பி, தமக்கு முன்னாகத் தம்முடைய சீஷர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள். அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்த படியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது: ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். இயேசு அவர்களை திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டினார். ஏனெனில் இயேசு இந்த உலகத்திலுள்ள மனிதர்களில் ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதற்காகவே இந்த பூமிக்கு வந்தார். அதற்காக தன் ஜீவனையே கொடுத்தார். தம்மை சிலுவையில் அறைந்து, நகைத்து கேலி செய்தவர்களை கூட அவர் சபிக்கவில்லை. அவர்கள் அறியாமல் செய்கின்றார்கள் என்று அவர்களை மன்னிக்கும்படி பரம பிதாவிடம் வேண்டிக் கொண்டார். பிரியமானவர்களே, சில வேளைகளிலே சில மனிதர்கள் தேவனுடைய திருச்சித்தத்தை இன்னும் அறிய வேண்டியபடி அறியாதபடியினாலே, தங்களோடு ஒத்துவராதவர் களைப் பார்த்து, “நான் முழங்காலில் நின்றால் உனக்கு என்ன நடக்கும் தெரியுமா” என்று திகிலடையச் செய்கின்றார்கள். நாங்கள் முழங்காலில் நின்று ஜெபிப்பது மற்றவர்களை சபிப்பதற்கும் அவர்கள் அழிந்து நரக ஆக்கினை அடைவதற்காகவும் அல்லவே. நாங்கள் வாழும் நாட்கள் நியாத்தீர்ப்பின் காலம் அல்ல. இது கிருபையின் நாட்கள். ஜீவனை அழிக்கும்படிக்கு அல்ல, இரட்சிப்புக்கு வழிநடத்தும்படிக்காகவே நாங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றோம். தேவனை இன்னும் அறியாதவர்கள் அழிந்து போகாமல் எங்களோடு கூட நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படிக்கே நாங்கள் பிரயாசப்படவேண்டும்.

**லூக்கா 9:56**

மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்.

**ஜெபம்**: பரிசுத்த தேவனே, எத்தனையோ ஜனங்கள் உம்மை எதிர்த்திருந்தும் நீரோ அவர்கள் மனந்திரும்பும்படி பொறுமையாக இருப்பது போல நானும் பொறுமையாக இருக்க என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனதுருக்கம் உடைய தேவன்

ஒரு கால கட்டத்திலே, இஸ்ரவேல் ஜனங்கள் பல தசாப்தங்களாக தேவனைவிட்டு தூரமாய் வாழ்ந்து வந்தார்கள். தேவனுடைய சத்த த்தை கேட்டும் உணர்வில்லாதவர்களாய், அதை அசட்டை பண்ணி, அக் கிரமங்களை மிகுதியாய்ச் செய்தார்கள். தேவ வசனத்தை கொண்டு வந்த அவருடைய ஊழியர்களை கொலை செய்தார்கள். இப்படியாக அக்கிரமங்கள் நிறைவேறும் போது, எலியா எலிஷா, மற்றும் ஏரே மியா, எசேக்கியேல் போன்ற தீர்க்கத ரிசிகளின் நாட்களில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. இந்த தீர்க்கதரிசிகள் தேவன் உரைத்ததை அவர் உரைத்தபடியே கூறினார்களே தவிர, தங்கள் கோபத்தையும், உக் கிரத்தையும் வெளிக்காட்டவில்லை. ஜன ங்கள் அழிந்து போக வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அந்த நியாயத்தீர்ப்பின் வழியாக ஜனங்கள் ஒரு வேளை உணர்வடைந்து தன்னிடம் திரும்புவார்கள் என்று தேவன் எதிர்பா ர்த்திருந்தார். நினிவே என்னும் பட்ட ணத்தின் அக்கிரமம் மிகுதியாகி அவை தேவ சமுகத்தில் வந்து எட் டிய போது, இன்னும் 40 நாட்களிலே நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று தேவ ஊழியராகிய யோனா வழியாக அவர்களுக்கு எச்சரிப்பு கொடு க்கப்பட்டது. அந்த பட்டணத்தின் ஜனங்கள் மனந்திரும்பியதால், தேவன் அவர்களுக்கு இரங்கி, வரவிருந்த அழிவை நீக்கிப்போட்டார். ஆனால், யோனாவிற்கு மனதிலே எரிச்சல் உண்டாகிற்று. அந்த பட்ட ணமானது தான் உரைத்தபடி அழிய வேண்டும் என்று எதிர்பார்த்திரு ந்தார். ஆனால், தேவனோ, தம்முடைய எச்சரிப்பின் வழியாக ஒரு வேளை ஜனங்கள் தங்கள் பாவத்தைவிட்டு திரும்புவார்கள் என்ற மனதுருக்கமுள்ள உள்ளம் உடையவராக இருந்தார். தேவனுடைய வார் த்தையை உரைக்கின்ற நாங்கள், தேவன் எவ்வளவு அன்புள்ளவர் என்பதை எங்கள் வாழ்க்கையின் சாட்சி வழியாக காண்பிக்க வேண் டும். அதாவது, குற்றம் செய்தவர்களின் தண்டனை உடனடியாக அவ ர்கள் மேல் வந்து அவர்கள் அழிந்து போகாமல், அவர்கள் உணர் வடைய வேண்டும் என்னும் மனநிலையோடே கிறிஸ்துவினுடைய நற்செய் தியை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

**யோனா 3:10**

**தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய் வேன் என்று சொல்லி யிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதை ச் செய்யாதிருந்தார்.**

**ஜெபம்**: மனதுருக்கமுடைய தேவனே, அன்போடு உம்முடைய வார்த் தைகளை மற்றவர்களுக்கு எடுத்து உரைக்கும்படிக்கு, உம்மைப் போன்ற உள்ளத்தை எனக்கு தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மிகுந்த கிருபையுள்ளவர்

தொலைந்துபோன கெட்ட குமாரன் அழிந்து போவதை பிதாவாகிய தேவன் விரும்பவில்லை. நினிவே பட்டணத்து மக்கள், தங்கள் பொல்லாத வழிகளால் நிர்மூலமாக்கப்படுவதை தேவன் விரும்பவில்லை. தன்னுடைய வார்த்தையைக் கேளாமல் பல ஆண்டுகளாக பாவம் செய்து வந்த தம்முடைய ஜனங்கள் முற்றாக மாண்டு போவதை அவர் விரும்பவில்லை. ஒரு வேளை குறிப்பிட்ட ஒரு மனிதன் தேவனுக்கு எதிராகவும் எங்களுக்கு எதிராகவும் குற்றம் செய்து, எங்கள் சமுகத்தை விட்டோ அல்லது ஐக்கியத்தைவிட்டோ போய்விடலாம். அந்த மனிதனும் அழிந்து போவதை தேவன் விரும்பவில்லை. குற்றம் செய்த மனிதன் நானாக இருக்கலாம் அல்லது நீங்களாக இருக்கலாம். யாராக இருந்தாலும் தேவனிடம் பட்சபாதம் இல்லை. நான் யாராக இருந்தாலும், ஏதோ ஒரு காரியத்திற்காக உங்கள் மேல் வெறுப்பு வைக்கலாம், அதனால் உங்களைக் குறித்த தேவனுடைய அன்பு தணிந்து போவதில்லை. அது போல, ஒரு வேளை நீங்கள் என்னை வெறுத்து தள்ளிவிடலாம், ஆனால் தேவனுடைய அணைக்கும் கரங்கள் தளர்ந்து போவதில்லை. தேவனுடைய வாக்குத்தத்தங்கள், அவருடைய மனதுருக்கம், என்னுடைய பெலவீன நேரங்களுக்கு மாத்திரமல்ல. என்னுடைய பெலவீன நேரங்களில் எனக்கு இரங்குவது போல தேவன் மற்றவர்களுக்கும் இரங்குகின்றார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். எனவே நாங்கள் பரம பிதாவை அறிகின்ற அறிவிலே அனுதினமும் நாங்கள் வளர வேண்டும். உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், அவர் சமீபமாயிருக்கிறார். யாவரும் மனந்திரும்பி தம்மிடம் சேரும்படியாய் நீடிய பொறு யுள்ளவராக இருக்கின்றார்.

**சங்கீதம் 103:8**

**கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, நீர் யாவருக்கும் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் என்பதை உணர்ந்து சுயநல மற்றவனா(ளா)ய் வாழ என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | புரட்டாதி 15 — 📖 மாலை வாசகம் – மத்தேயு 7:1 – 5

# இரக்கம் மேன்மை பாராட்டும்

கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும் என்ற தேவனுடைய வார்த்தை உண்மையுள்ளது. அந்த வார்த்தை தேவன் குறித்த காலத்திலே நிறைவேறும். தற்காலத்திலே, நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் ஒரு குற்றத்தை செய்து விட்டீர்கள் என வைத்துக் கொள்வோம். இது முதல் தடவையல்ல, இதற்கு முன்னதாக அதே குற்றத்தை ஐந்து தடவைகள் செய்து விட்டீர்கள் என கூறுவோம். அந்த வேளையிலே, உங்களுக்கு தேவ கோபாக்கினை வரவேண்டும் என்று விரும்புவீர்களா? அல்லது தேவ கிருபை வேண்டும் என்று விரும்புவீர்களா? சற்று சிந்தித்துப் பாருங்கள்! நாங்கள் யாவரும் தேவ கிருபை அதிகதிகமாக எங்கள் வாழ்வில் வெளிப்பட வேண்டும் என்றே விரும்புவோம். எனவே நாங்கள் எங்களை எப்படி நேசிக்கின்றோமோ அதே போல பிறரையும் நேசிக்க வேண்டும். கிருபை பெருகும் என்று மனந்திரும்பாமல் பாவத்திலேயே ஜீவிப்பவர்கள், தேவனுடைய கிருபையை போக்கடிப்பதால், குறித்த நாளிலே அவர்கள் தங்களுடைய பிரயாசத்தின் பின்விளைவை அறுப்பார்கள். ஆனால், அவர்கள் அப்படியாக அழிந்து போவதை நாங்கள் விரும்பக் கூடாது. ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள் நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும் என்று இயேசு கூறியிருக்கின்றார். இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும் நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும். "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்று ஜெபிக்கும்படி கர்த்தர் எங்களுக்கு கற்றுத் தந்திருக்கின்றார். ஒரு சமயம் இயேசுவின் பிரதான சீஷனாகிய பேதுரு அவரிடத்தில் வந்து, ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரம் மாத்திரம் அல்ல, ஏழெழுபது தரம் மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன். அதாவது தாராள மனதுடன் உன் சகோதரனுக்கு இரங்கும்படியாய் இயேசு கூறினார். நாங்கள் இரக்கம் பெறும்படி எங்கள் இரக்கத்தை தாராளமாய் அள்ளி வழங்குவோம்.

**யாக்கோபு 2:13**

நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்

**ஜெபம்**: இரக்கம் நிறைந்த தேவனே, எண்ணற்ற தடவைகள் எனக்கு நீர் இரக்கம் செய்து வருகின்றது போல, நானும் என் இரக்கத்தை மற்றவர்கள் மேல் காண்பிக்கும்படியாக என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்போடு கூடிய கிரியை

**பிலிப்பியர் 1:17**

**சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள்.**

"பக்கத்து வீட்டிலே வசிப்பவன் தன் வீட்டை உடைத்து இன்னும் பெரிதாக கட்டியிருக்கின்றானே, அதனால் நாங்களும் அதற்கீடாக வீட்டை பெரிப்பிக்க வேண்டும்" அல்லது "அண்ணனுடைய பையன் நல்ல மாதிரி படித்து அதிக புள்ளிகளை பெற்றுக் கொள்கின்றானே, அதனால் எங்கள் பையனும் அப்படி படிக்க வேண்டும்" என்று சில மனிதர்கள் கூறுவதை கேள்விப்பட்டிருக்கின்றோம். சில மனிதர்கள் தங்கள் வாழ்க்கையின் கருப்பொருளை மறந்து மற்றவர்களுக்காக தங்கள் வாழ்வை மாற்றி அமைத்து விடுகின்றார்கள். இந்த பூமியிலே நான் எதற்காக வாழுகின்றேன் என்பதை அறிந்து அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதே தேவையானது. நன்மை செய்வது நல்லது ஆனால் மற்றவன் செய்வதால் நான் செய்ய வேண்டும் என்று செய்யும் நன்மை எங்கள் உள்ளத்திலிருந்து வரும் நன்மை அல்ல. சில வேளைகளிலே நாங்கள், எங்களை அறியாமலே போட்டி உணர்வோடு எங்கள் வாழ்க்கையை வாழ ஆரம்பித்துவிடுகின்றோம். இந்த நிலைமை எங்கள் வீட்டில் மாத்திரமல்ல நாங்கள் வேலை பார்க்கும் இடம் மற்றும் சபை ஐக்கியங்களிலும் நுழைந்து விடுகின்றது. தேவ ஊழியராகிய பவுலின் நாட்களிலே, அவர் நற்செய்தியை அறிவித்ததின் நிமித்தமாக சிறையிலே போடப்பட்டார். அந்நாட்களிலே, சிலர் அவர்மேல் பொறாமை கொண்டதினால், விரோதத்தினாலே கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள். அவருக்கு நேர்ந்த துன்பத்தோடே இன்னுமாய் உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்த மனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவித்தார்கள். இருதயங்களை ஆராய்தறிக்கின்ற தேவன் எங்கள் இருதயத்தின் எண்ணங்களை அறிந்திருக்கின்றார். பிரியமானவர்களே, நாங்கள் மற்றவர்களுக்கு போட்டியாளர்கள் அல்ல. எங்களை முன்னறிந்து அழைத்த தேவன் எங்கள் வாழ்க்கையிலே ஒரு நோக்கத்தை வைத்திருக்கின்றார். எனவே தேவ சித்தம் எங்கள் வாழ்வில் நிறைவேறும்படிக்காகவே நாங்கள் நல்மனதோடு பிரயாசப்படவேண்டும். வேறுபட்ட மனதோடு அல்ல அன்போடு கிறிஸ்துவின் நற்செய்தியை நாங்கள் அறிவிக்க வேண்டும்.

**ஜெபம்**: பரலோக தந்தையே, மற்றவர்களின் நிலைமையின்படி நான் செயற்படாமல், நீர் என்னை அழைத்த நோக்கம் என்னில் நிறைவேறும்படி நான் பிரயாசப்பட என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆவியிலே இசைந்திருப்போம்

அந்நாட்களிலிருந்த யூத மதத் தலைவர்களில் பலர், இயேசு தங்களுடைய கொள்கைகளுக்கும் எண்ணங்களுக்கும் உடன்படாததால் அவரை விரோதித்தார்கள். தேவனுடைய சித்தம் என்ன என்பதையும், தங்கள் வழிகள் எப்படி இருக்கின்றது என்றும் ஆராய்ந்து பார்ப்பதற்கு பதிலாக "நாங்கள் தான் சரியானவர்கள்" என்ற எண்ணமுடையவர்களாயிருந்தார்கள். ஆனால் இயேசுவோ அவர்களுடைய தீமையான எண்ணத்திற்கு உடன்படவில்லை. ஒரு சமயம், கர்த்தருடைய சீஷனாகிய யோவான் அவரை நோக்கி: ஐயரே, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட உம்மைப் பின்பற்றாதவனானபடியால், அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயேசு: தடுக்கவேண்டாம்நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான் என்றார். இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் ஒரு தேசத்தில் இருக்கும் ஆவிக்குரிய சபை ஐக்கியம் ஒன்றிலே கூடி தேவனை ஆராதித்து வருகின்றீர்கள். அவ்வண்ணமாக நான் இன்னுமொரு தேசத்திலே குறிப்பிட்ட ஒரு ஆவிக்குரிய சபை ஐக்கியத்திலே தேவனை ஆராதித்து வருகின்றேன். நாங்கள் சரீரத்திலே பிரிந்திருந்தாலும், நாங்கள் பிரிவினையுடையவர்கள் அல்ல. அவரவர் வசிக்கும் இடத்தில் இயேசுவின் நாமத்தில் ஒன்றுகூடி பிதாவாகிய தேவனை ஆராதித்து வருகின்றோம். தூய ஆவியானவர் தாமே எங்களை வழி நடத்தி வருகின்றார். இப்படியாக பற்பல தேசங்களிலே, வேறுபட்ட மொழிகளிலே தேவனை ஆராதித்து வருகின்றார்கள். தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்கின்றவர்கள் எங்கிருந்தாலும் ஒரே ஆவியினாலே ஒன்றாய் இசைந்திருக்கின்றார்கள். எனவே எங்களோடு சேர்ந்து இயேசுவை பின்பற்றாதவர்களை நியாயந்தீர்க்கும் விடயத்திலே எச்சரிக்கையாயிருங்கள். இதனால் கசப்பான வேர் எங் கள் இருதயத்தில் சிறிதாகத் தோன்றி, பின்பு எங்கள் சமாதானத்தை முற்றாக கெடுத்துவிடும். மனிதர்கள் எங்களுடைய பட்சத்தில் இருப்பதல்ல, தேவன் எங்களுடைய பட்சத்திலே இருப்பதே தேவையானது. மனிதன் எங்கே இருக்கின்றான் என்றும் அவனுடைய நினைவுகள் இன்னதென்றும் தேவன் அறிவார்.

**லூக்கா 9:50**

அதற்கு இயேசு: தடுக்க வேண்டாம் நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான் என்றார்.

**ஜெபம்:** நீதியுள்ள தேவனே, நாங்கள் மட்டும்தான் சரியாக நடக்கின்றோம் என்ற எண்ணத்தை களைந்து விட்டு உம்முடைய சமுகத்திலே எங்களைத் தாழ்த்தி உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இலக்கின்மேல் கண்கள்

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும் கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது. கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்று இயேசு கூறியிருக்கின்றார். வேதப்புரட்டர்களின் கனிகள் கெட்டது என்பதை வெளிப்படுத்தும்படிக்கு நாங்கள் கிரியைகளை நடப்பிக்கத் தேவையில்லை. குறித்த காலத்தில் அவர்களுடைய கனிகள் அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தும். எங்கள் கண்களை பந்தயப்பொருளாகிய பரலோகத்திலிருந்து வேறு இடங்களுக்கு திசை திருப்புவதே எதிராளியாகிய பிசாசானவனின் நோக்கம். எனவே நாங்கள் மற்றவர்களுடைய வாழ்க்கையின் குறைகளை பற்றி விமர்சிப்பதினால் எங்கள் வாழ்க்கையின் நோக்கத்தை இழந்துவிடாதபடிக்கு மிகவும் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். காலத்திற்கு முன் எவரையும் எந்தக் காரியத்தையும் குறித்து நியாயந்தீர்க்காமல், தேவனுடைய நேரத்திற்காக காத்திருக்க வேண்டும். புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளைப் போல, மணவாட்டி சபையாகிய நாங்கள், எங்கள் விளக்கின் எண்ணை குறையாமல், மணவாளனாகிய இயேசுவின் வருகைக்காக விழிப்புடன் காத்திருக்க வேண்டும். எங்கள் கண்களை வேறு கவனங்களுக்கு செலுத்துவோமாக இருந்தால், போகும் பாதையில் நாங்களும் இடறி விழுந்து விடுவோம். கர்த்தரோடு வாழுங்கள். நாங்கள் அவரோடு இருந்தால், யார் எங்களை அவருடைய கரத்திலிருந்து பறித்துக் கொள்ளக் கூடும்? என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன் அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கின்றார்.

**மத்தேயு 7:20**

**ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.**

**ஜெபம்**: பரலோக பிதாவே, பரலோகம் சென்றடையும் இலக்கை ஒருபோதும் நான் மறந்து போகாதபடிக்கு எப்போதும் உம்முடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து உம்மை பின்பற்ற எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சித்தம் நிறைவேறும்

ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களிலே, யூத மதத் தலைவர்கள் தங்களின் மனக்கடினத்தை உணராமல், தாங்கள் தங்கள் தேசத்திற்கும், மதத்திற்கும், ஜனங்களுக்கும், தங்களுக்கும் தொண்டு செய்கின்றோம் என்ற எண்ணத்துடன், இயேசுவின் சீஷர்கள் சிலரை ஒருமனப்பட்டு கொலை செய்தார்கள். அந்நாட்களிலே, இயேசுவின் சீஷர்கள், இயேசுவின் நாமத்தினாலே பல நன்மைகளை செய்து வந்தார்கள். அவர்கள் வழியாக வியத்தகு அற்புதங்களை தேவன் நடப்பித்தார். அதைக் கண்ட யூத மதத் தலைவர்கள், பொறாமையினால் நிறைந்து, இயேசுவின் அப்போஸ்தலரை சிறையில் போட்டார்கள். அவர்களின் போதனையை நிறுத்தும்படிக்கு அவர்களை கொன்றுபோடும்படி வகை தேடினார்கள். அப்பொழுது சகல ஜனங்களாலும் கனம்பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் மனிதன், சங்கத்தாரை நோக்கி: இஸ்ரவேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவனும், கலிலேயனாகிய யூதாஸ் என்பவனும் தங்களுக்கென்று ஜனங்களை இழுத்தார்கள். ஆனால் இருவரும் மடிந்து அழிந்து போனார்கள். அந்தப்படியே இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் அழிந்துபோம்: தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது. தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான். ஆம் பிரியமானவர்களே, நாங்களும் இந்த நாட்களிலே, உலகளாவிய மட்டத்திலே, பல விதமான சம்பவங்களையும் உபதேசங்களையும் குறித்து கேள்விப்படுகின்றோம். அவை மனுஷ சித்தத்தினால் உண்டாயிருந்தால் அது நிலைநிற்காது. அவை யாவும் தேவனுடைய நியாயாசனத்திற்கு கொண்டு வரப்படும் நாள் உண்டு. எங்கள் குடும்பத்தில் நாங்கள் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் அநேகம் இருக்கும் போது, வேறு இடங்களில் நடக்கும் பலவிதமான சம்பவங்களினால் நாங்கள் சோர்ந்து போய்விடக்கூடாது. ஒரு வேளை எங்களை சூழ நடக்கும் சில காரியங்கள் தேவனால் உண்டாயிருந்தால், நாங்கள் அதற்கு எதிர்த்து நிற்க முடியாது. எனவே உற்சாகத்துடன் எங்கள் மத்தியிலே நாங்கள் செய்ய வேண்டியவைகளைச் செய்து முன்னேறுவோம்.

**அப்போஸ்தலர் 5:39**

தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான்.

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, உலகிலே நடக்கும் காரியங்கள் யாவையும் நீர் அறிந்திருக்கின்றீர், உம்முடைய சித்தம் இன்னதென்பதை அறிந்து கொள்ளும் ஞானமுள்ள உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ நீதியை நிறைவேற்றுங்கள்

இன்றைய உலகிலே பல மட்டங்களிலே அதிகார துஷ்பிரயோகங்கள் நடப்பதை செய்திகள் வாயிலாக கேள்விப்படுகின்றோம். இயேசு இந்த பூமியில் வாழ்ந்த நாட்களிலே இருந்த மதத் தலைவர்களையும் அவர்களின் செய்கைகளையும் கண்டித்துப் பேசினார். வேதபாரகரும், பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும் படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள் அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள் ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள். சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள் தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள். நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் அவர்கள் மேல் இருக்கின்றது என இயேசு கூறினார். அது மட்டுமல்ல, கிறிஸ்தவர்கள், நற்செய்தியை அறிவிப்பதன் நிமித்தம், இயேசுவின் திருப்பணியின் நாட்கள் தொடக்கம் இன்றுவரைக்கும் துன்பப்படுத்தப் படுகின்றார்கள். பொதுவான அதிகார துஷ்பிரயோகம் என்று கூறும் போது, நாங்கள் எங்கள் மேல் ஆளுகை செய்கின்றவர்களையே கண்டு கொள்கின்றோம். ஆனால், சில வேளைகளில் எங்களை நாங்கள் ஆராய்ந்து பார்க்கத் தவறி விடுகின்றோம். எங்கள் குடும்பத்தில், வேலையில், சபையில், சமுகத்தில் எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிறிய அதிகாரத்தையும் நாங்கள் துஷ்பிரயோகம் செய்யலாகாது. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும். எனவே நாங்கள் தேவனுக்குப் பயந்து அவருடைய நீதியை நிறைவேற்றுவோம்.

**ரோமர் 2:7**

**சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, எங்களைச் சூழ என்ன விதமான சம்பவங்கள் நடை பெற்றாலும், எனக்கு கொடுக்கப்பட்டவைகளிலே நான் உண்மையுள்ளவனாக இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுக்குப் பிரியமானவைகள்

> **சங்கீதம் 40:8**
>
> **என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்**

இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுல் என்பவர், தேவன் அழித்துப் போடச் சொன்ன சாபத்தீடானவைகளை முற்றாக அழித்துப்போடாமல், தேவ கட்டளைகளை அற்பமாக மீறி சாபத்தீடானவைகளிலே கொழுமையானவைகளை தேவனுக்கு பலியிடக் கொண்டு வந்தேன் என்று தீர்க்கதரிசியாகிய சாமுவேலிடம் கூறினார். அதற்கு சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் என்று கூறினார். இந்த சம்பவத்தை மையமாக வைத்து எங்களுடைய வாழ்க்கையை நாங்கள் தேவ சமுகத்திலே ஆராய்ந்து பார்க்க வேண்டும். வீட்டிலும், சபையிலும், வெளி இடங்களிலும் நாங்கள் எங்கள் தேவனுக்கு ஆராதனைகளை செலுத்தி வருகின்றோம். எங்கள் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலிகளை தேவனுக்கு செலுத்துகின்றோம். அழகான பாடல் வரிகளை, நேர்த்தியான இசையோடு பாடுகின்றோம். இவைகளை நாங்கள் நிறுத்தி விடாமல் இன்னும் உற்சாகமாகச் செய்ய வேண்டும். ஆனால் அந்த பலிகள் தேவனுக்கு உகந்த காணிக்கையாகவும், சுகந்த வாசனையாகவும் இருக்க வேண்டுமென்றால், தேவனுடைய வார்த்தைக்கு நாங்கள் செவிசாய்த்து, ஆர்வமுடன் அந்த வார்த்தையைக் கேட்டு, அதற்கமைய எங்கள் வாழ்வின் நடவடிக்கைகளில், நாங்கள் எங்களைத் தாழ்த்தி, கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய நீதி நியாயங்கள் எங்கள் வாயில் மாத்திரமல்ல, எங்கள் இருதயத்திலும் பதித்து வைக்கப்பட வேண்டும். அதாவது, தேவனுடைய பிரமாணங்களை அறிந்த நாங்கள், அவைகளை எங்கள் வாயினாலே மற்றவர்களுக்கு அறிவித்து கூறுகின்றோம். மகா சபையிலும் சங்கத்திலும் அவருடைய மகத்துவத்தை பிரஸ்தாப்படுத்துகின்றோம். அவைகள் செய்யப்பட வேண்டியவைகளே. வாயினாலே கூறுவதுடன் நிறுத்தி விடாமல், தேவனுடைய பிரமாணங்களை எங்கள் இருதயத்திலே பதித்து வைத்து, அவைகளை எல்லா காவலோடும் காத்துக் கொண்டு, அந்த பிரமாணங்களின்படி, தேவனுக்கு பிரியமானதை எங்கள் வாழ்வில் செய்ய வேண்டும். அப்பொழுது எங்கள் ஆராதனையில் தேவன் பிரியமுள்ளவராக இருப்பார்.

**ஜெபம்**: அன்பான பிதாவே, உமக்கு பிரியாமான வாழ்க்கை வாழும்படியாக, உம்முடைய வசனத்திற்கு செவி கொடுத்து, என்னைத் தாழ்த்தி, கீழ்ப்படிந்து, உமக்கு பிரியமாக வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தவறி விழும் வேளையில்

ஆரோக்கியமான சுக வாழ்வு வாழ்வதற்கு சுகாதாரம் அவசியம் என்று நாங்கள் கற்றிருக்கின்றோம். ஒருவன் தன் வாழ்வில் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்கத் தவறியதால் அவனுக்கு நோய் ஏற்பட்டுவிட்டது. தான் செய்த தவறினாலே இந்த நிலைக்குள்ளானேன் என்று உணர்ந்த அவன், இது என்னுடைய தவறு என்று வைத்தியரிடம் செல்லாமல் இருந்தால் அவனுடைய நிலைமை என்னவாகும்? அதே போல, இந்த பூமியிலே உயிரோடு வாழும் நாட்களிலே, தேவனுக்கு பிரியமானதும் எங்கள் ஆத்துமாவிற்கும் ஆரோக்கியமானதுமான வாழ்க்கை வாழ்வதற்காக தேவ பிரமாணங்கள் எங்களுக்கு கொடு க்கப்பட்டிருக்கின்றது. தேவ பிரமாணம் ஒன்றை மீறி குற்றம் செய்த மனிதன், நான் தேவனுக்கு விரோதமாக குற்றம் செய்தேன். அவருக்கு பிரியமானதை நான் செய்ய தவறிவிட்டேன், இனி எப்படி தேவனுக்கு பிரியமான ஆராதனை செய்வது, என்று தன் உள்ளத்தில் கூறிக் கொண்டு, அவருடைய சமுகத்தைவிட்டு தன்னை தூரப்படுத்திக் கொள்வானாகில், அந்தச் செய்கை, அவனுடைய வாழ்க்கைக்கு இன்னும் அதிக தீமையை உண்டு பண்ணும். பிரியமானவர்களே, பாவ நோயாலே எங்கள் ஆத்துமா வாடும் போது, பரமன் இயேசுவே எங்கள் பரம வைத்தியராக இருக்கின்றார். ஆத்துமாவிற்கு தேவையான அருமருந்து அவரிடமே உண்டு. எனவே பெலவீனங்கள் தலைதூக்கும் போது அவரைவிட்டு தூரம் சென்று விடாதிருங்கள். தேவனைவிட்டு தூரம் செல்கின்றேன் என்பதன் சில அறிகுறிகள். சபை கூடிவருதலை விட்டுவிடுதல், வேத வாசிப்பு, ஜெபம் செய்தல் போன்றவைகள் குறைவடைதல், விட்டு வந்த பழைய வாழ்க்கையின் நண்பர்களை நாடுதல். இவைகளை காணும்போது, தேவனை அண்டிச் சேருங்கள். வேதத்தை வாசியுங்கள். அவை ஜீவனுள்ளவைகள்! குருடுபட்ட எங்கள் மனக்கண் களை பிரகாசமடையச் செய்து, சோர்ந்துபோன ஆத்துமாவை உயிர்ப்பிக்க வல்லமையுள்ளது. இருதயத்தை தேவனிடம் ஒப்புக் கொடு ங்கள், தேவ ஆலோசனையை நாடுங்கள். பரிந்து பேசி ஜெபிக்கும் சகோதர சகோதரிகளிடம் விண்ணப்பத்தை தெரியப்படுத்துங்கள்.

**சங்கீதம் 94:18**

**என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும் போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது.**

**ஜெபம்:** கிருபை நிறைந்த தேவனே, என்னுடைய கால்கள் சறுக்கும் போது நீரே என்னை தாங்குகின்றீர் என்பதை உணர்ந்து எப்போதும் உம்மண்டை கிட்டிச் சேரும்படி எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனிடத்திற்கு சேருங்கள்

பரம பிதாவைவிட்டு தூரம் சென்றுவிட்டேன் என்று கூறும் போது, கெட்ட குமாரனுடைய சம்பவமே எங்கள் உள்ளத்திலே முதலாவதாக தோன்றும். தன்னுடைய தகப்பன் வீட்டைவிட்டு தன் உடமைகளோடு, தூர தேசத்திற்கு அவன் சென்றிருந்தான். அது போல, ஒருவேளை எங்கள் பிள்ளைகளோ அல்லது நாங்கள் அறிந்தவர்களின் பிள்ளைகளோ இப்படியாக துணிகரமான செயல்களை செய்திருக்கலாம் அல்லது செய்யலாம். சில வேளைகளிலே நாங்களும் அப்படியான நிலைக்குத் தள்ளப்படலாம். நானும் நீங்களும் இன்று பரம தந்தையோடு இருக்கின்றோம் என்றால் அது தேவனுடைய சுத்த கிருபை. தேவனைவிட்டு தூரம் செல்வது என்று கூறும் போது, வெளிப்படையாக, மற்றவர்கள் யாவரும் காணக்கூடியதுமான, துன்மார்க்கமான வாழ்க்கை வாழ்வது மட்டுமல்ல. நாங்கள் நிற்க வேண்டிய நிலையைவிட்டு அகன்று போகும் போது நாங்கள் தேவனை விட்டு தூரம் செல்ல ஆரம்பிக்கின்றோம். கிறிஸ்துவிலே நிலைத்திருந்து கனி கொடுக்கும் படியாகவே நாங்கள் அழைக்கப்பட்டோம். எடுத்துக் காட்டாக, நாவினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம் தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. அப்படியாக தேவனை துதிக்கும் எங்களது நாவு, மற்றவர்களின் குறைகளை பேசித் திரியும் போது அங்கே சபித்தல் உண்டாகின்றது. அது ஒரு கிறிஸ்தவன் நிற்க வேண்டிய நிலை அல்ல. அப்படி செய்யும் போது அவன் தன் நிலையைவிட்டு அக ன்று போவதால், தேவனைவிட்டுத் தூரம் செல்ல ஆரம்பிக்கின்றான். பிரியமானவர்களே, இந்த வார்த்தைகள் கடுமையானதாக இருந்தாலும், உண்மையான வார்த்தைகள். எடுத்துக் கூறப்பட வேண்டிய வார்த்தைகள். தற்போது வெளி யரங்கமாக இருக்கும் மற்றவர்களுடைய குற்றங்களை நாங்கள் இன்று விமர்சிக்கலாம். அப்படி செய்யும் போது நாங்கள் கிறிஸ்துவை சார்ந்தவர்கள் அல்ல என்பதை மற்றவர்களுக்கு வெளியரங்கமாக நிரூபித்து விடுகின்றோம். எங்கள் இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன் அங்கே என்ன இருக்கின்றது என்று அறிவார். தேவனுக்கு பிரியமில்லாத, அவரைவிட்டு தூரம் போகும் காரியங்கள் இருக்குமாயின் அவற்றை அறிக்கையிட்டு தேவனிடத்தில் சேருவோம்.

**யாக்கோபு 4:8**

தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு என் இருதயத்தை ஒப்புக் கொடுக்காமல், உமக்கு பிரியமானதை செய்யும்படிக்கு எனக்கு கற்றுத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | புரட்டாதி 24

📖 மாலை வாசகம் – மத்தேயு 26:41

# ஜெபத்தின் வல்லமை

ரோமர் குடியேறின பிலிப்பி என்னும் பட்டணத்தில் பவுலும், சீலாவும் வந்து, சிலநாள் தங்கியிருந்த போது, அவர்கள் வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்திற்குப் போனார்கள். அங்கே குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் வாழ்ந்து வந்தாள். பவுல் அந்த அசுத்த ஆவியை நோக்கி: "நீ இவளை விட்டுப்புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்று அந்த ஆவியுடனே சொன்னான் அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று. அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று கண்டு, பவுலினதும், சீலாவினதும் வஸ்திரங்களை கிழித்து, அநேக அடிகள் அடித்த பின்பு, சிறைச்சாலைக்காரன், அவர்களை சிறைச்சாலையிலே வைத்து, உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தான். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள் காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவு களெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுக்களும் கழன்றுபோயிற்று. அந்த இடத்திலே பெரிதான விடுதலை உண்டாயிற்று. அந்த சிறைச்சாலைக்காரன் அவர்களை நோக்கி: இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். அந்த சிறைச்சாலைக்காரனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். ஜெபத்தின் வல்லமையை சற்று சிந்தித்துப் பாருங்கள். உபத்திரவங்கள், அவமானங்கள், நிந்தைகள் மத்தியிலும், தங்களை அழைத்த தேவனுடைய சித்தம் நிறைவேறும்படியாய் மனநிறைவோடு பணி செய்தார்கள். நாங்களும் சூழ்நிலைகளைக் கண்டு மனம் சோர்ந்து போகாமல் ஜெபத்திலே உறுதியாய் தரித்திருப்போம்.

**அப்போஸ்தலர் 16:25**

**நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள் காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டு க்கொண்டிருந்தார்கள்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, எந்த சூழ்நிலைகளைக் கண்டும் மருண்டு போகாமல், பவுலையும், சீலாவையும் போல ஜெபத்திலே உறுதியாய் தரித்திருக்கும்படிக்கு தூய ஆவியினால் என்னை பெலப்படுத்தி நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சித்தம் நிறைவேறும்படி

கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்ட திருப்பணியை நிறைவேற்றி முடிக்கும்படி, அப்போஸ்தலனாகிய பவுல் மிகவும் துன்புறுத்தப்பட்டார். ஒரு முறையல்ல பல முறை அடிகப்பட்டார், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டார், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டார். கிறிஸ்துவின் நற்செய்தியின் நிமித்தமாக, இவர் பல முறை சிறைச்சாலையிலே போடப்பட்டார். இவர் ஜெபம் பண்ணும் போது, எல்லாச் சிறைசாலைகளின் அஸ்திபாரங்களும் அசைக்கப்படவில்லை. அதனால் அவர் ஜெபிப்பதை நிறுத்திவிடவில்லை. கருப்பொருளாவது, தேவனோடு ஜெபத்திலே இடைப்படுவது, எந்த சூழ்நிலையிலும் துதித்துப் பாடுவது இவருடைய வாழ்க்கையிலே ஒரு வழக்கமான செய்கையாக இருந்தது. மற்றவர்கள் பார்த்து பயந்து அதிசயிக்கத்தக்கதாக வெளிப்படையான அற்புதங்கள் எப்போதும் நடைபெற வேண்டும் என்ற நோக்குடன் இவர் ஜெபிக்கவில்லை. மாறாக தேவன் என்ன நோக்கத்திற்காக தன்னைப் பிடித்துக் கொண்டாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றி, தேவ சித்தத்தை நடத்தி முடிப்பதே அவருடைய வாழ்வின் முதன்மையான நோக்கமாக இருந்தது. ஒரு பிள்ளை தன் தந்தையிடம் எப்போதும் ஏதாவது ஒரு பரிசுப் பொருளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் தந்தை எப்போது வீடு திரும்புவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தால், அவன் தந்தையை அல்ல தந்தையிடம் இருந்து வரும் பரிசுப் பொருளை எதிர்பார்ப்பவனாக இருப்பான். எங்கள் ஜெபமும் அப்படி இருக்கலாகாது. பரம பிதாவின் சித்தம் எப்படி பரலோகத்திலே செய்யப் படுகின்றதோ, அப்படியாக இந்த பூமியிலும், குறிப்பாக என் வாழ்க்கையிலும் நிறைவேறும்படியாகவே நாங்கள் ஜெபம் செய்ய வேண்டும். தேவனோடு நாங்கள் கொண்டுள்ள உறவு இந்த உலக ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வதிலும் ஆழமாக இருக்க வேண்டும். ஜெபம் செய்வது ஒரு கிரியை அல்ல. ஜெபம் செய்வது நாங்கள் தேவனோடு உறவாடும் வேளை. எனவே எந்த சூழ்நிலையிலும், தேவனுடைய சித்தம் எங்கள் வாழ்வில் நிறைவேறும்படி க்காய் ஜெபம் செய்வோம்.

**பிலிப்பியர் 3:12**

**நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.**

**ஜெபம்:** என்னை பெயர் சொல்லி அழைத்த தேவனே, உலக ஆசீர்வாதங்களுக்காக ஜெபம் செய்யாமல், உம்முடைய சித்தம் இந்த பூமியிலே நிறைவேறும்படிக்காய் ஜெபம் செய்யத் துணை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒருவருக்காக ஒருவர் ஜெபித்தல்

இன்று ஒருவருக்காக ஒருவர் பரிந்து பேசி ஜெபிப்பதன் அவசியத்தை ஆராய்ந்து பார்ப்போம். தேவ ஊழியராகிய பவுல் என்பவரைப் பற்றி நாங்கள் நன்கு அறிந்திருக்கின்றோம். கிறிஸ்துவின் பணிக்காக பிரத்தியேகமான அழைப்பைப் பெற்ற இவர், எப்போதும் தேவனுடைய காரியங்களில் வைராக்கியமுள்ளவராக இருந்தார். தேவனோடு அதிகமாக ஜெபத்திலே இடைப்பட்டிருந்த இவர், எப்போதும் மற்றவர்களுடைய நிறைவான வாழ்க்கைக்காக வேண்டுதல் செய்து வந்தார். சில சந்தர்ப்பங்களிலே, முகமுகமாய் தரிசிக்காத உடன் சகோதர்களுடைய சந்தோஷத்திற்காக, அவர்களை நினைக்கும் போதெல்லாம் தேவனை ஸ்தோத்தரித்து வந்தார். இவருடைய திருப்பணியைப் பற்றி கர்த்தர்தாமே தெளிவானதும் திட்டமானதுமான வழிநடத்துதலை அவ்வப்போது கொடுத்து வந்திருந்தார். அவர் கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்கு எழுதும் போது "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக்குறித்துப் பேசவேண்டியபிரகாரமாய்ப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு, **திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்** என்று கூறினார். சற்றி சிந்தித்துப் பாருங்கள்! தேவனிடத்திலிருந்து யாருமறியாத இரகசியங்களை பெற்ற இவர், அந்த இரகசியத்தை, இந்த பூவுலகிலே கூற வேண்டிய பிரகாரமாக மற்றவர்களுக்கு கூறும்படிக்கும், புதிய வாசல்கள் திறக்கும் படிக்கும் தன்னுடைய ஊழியத்திற்காக ஜெபிக்கும்படியாக வேண்டிக் கொண்டார். கருப்பொருளாவது, நாங்கள் எந்த நிலையில் இருந்தாலும், எப்படிப்பட்ட அழைப்பைப் பெற்றிருந்தாலும், இந்த பூமியிலே தேவன் எங்களுக்கு கொடுத்த பணியை வெற்றியோடு நிறைவேற்றி முடிப்பதற்கும், தேவன் விரும்பும் வாழ்க்கையை வாழ்வதற்கும் எங்களுக்கு ஜெபம் இன்றியமையாதது. ஊழியராகிய பவுல் ஜெபம் செய்பவராக இருந்தாலும், தன்னைத் தாழ்த்தி, தனக்காகவும் ஜெபிக்கும்படி மற்றவர்களையும் வேண்டிக் கொண்டார். நாங்கள் மற்றவர்களுக்காக ஜெபிப்பதுடன், எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்.

**கொலோசெயர் 4:4**

திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, ஜெபத்தின் வல்லமையை உணர்ந்தவனா(ளா)க, மற்றவர்களுக்காக எப்போதும் பரிந்து பேசி ஜெபிக்கும் படிக்கு உற்சாகத்தின் ஆவியை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நற்சாட்சியாய் வாழுவோம்

பெற்றோரே எங்களுக்கு எல்லாம் என்று வாழ்ந்த சிறு பிள்ளைகள், வாலிபப் பருவத்தை அடைந்ததும் அவர்களுடைய பேச்சின் தொனி மாறிவிடுகின்றதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. சில சமயங்களிலே "உங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று சொல்லும் பிள்ளைகளும் இருக்கின்றார்கள். இன்னும் சிலர் வாலிபப் பருவம் அடைந்ததும், தாய் தந்தையர் முன்பாக தங்கள் நடத்தையை காத்துக் கொண்டிருந்தாலும், தங்கள் நண்பர்களை சந்திக்கும் போது, அவர்களோடு சேர்ந்து அவர்கள் தங்கள் பெற்றோர், தங்களை எரிச்சலடையச் செய்கின்றார்கள் என்று கூறிக் கொள்வார்கள். சில வேளைகளிலே தங்கள் நண்பர்கள் மத்தியிலே தனித்துவமானவர்களாக தங்களை காண்பிக்க வெட்கமடைவதால், அவர்கள் எப்படியான மனோநிலையோடு இருக்கின்றார்களோ, அவ்வண்ணமாகவே தாங்களும் இருக்கின்றோம் என்று காண்பித்துக் கொள்கின்றார்கள். இவர்கள் யாவர் மத்தியிலும், தங்கள் பெற்றோரின் நிலையை நன்கு அறிந்து, வீட்டிலும், வெளியிலும் உண்மை மனதுடன் அவர்களை நேசிக்கும் பிள்ளைகளும் இருக்கின்றார்கள். இதற்கொத்ததாக, தேவனை அறியாத நண்பர்கள், உறவினர் மத்தியிலே நாங்கள் இருக்கும் போது, எங்கள் மனோநிலை எப்படியாக இருக்கின்றது? அவர்கள் மத்தியில், எங்கள் நடக்கையால் பரமபிதாவினுடைய நாமம் தூஷிக்கப்படும்படியாக வார்த்தைகளை நாங்கள் பேசக்கூடாது. எங்கள் கிரியைகள் யாவும் பரம பிதாவை மகிமைப் படுத்த வேண்டும். எந்த நிலையிலும் எங்கள் தேவனைக் குறித்து நாங்கள் வெட்கமடையக் கூடாது. அதாவது, நான் என்னை வித்தியாசமாகக் காட்டினால் என் நண்பர்கள் அல்லது உறவினர்கள் என்னை பரியாசம் பண்ணுவார்கள் அல்லது என்னை சேர்த்துக் கொள்ளமாட்டார்கள் என்று அவர்கள் விரும்பும் காரியங்களுக்கு நாங்கள் உடந்தையாக இருக்கக்கூடாது. எங்கள் நல் நடக்கையைக் யாவர் மத்தியிலும் நாங்கள் காத்துக் கொள்ள வேண்டும்.

**1 பேதுரு 2:12**

அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, எங்கு சென்றாலும் எந்த சூழ்நிலையிலும் யாவர் மத்தியிலும் என் நல் நடக்கையைக் காத்துக் கொள்ளும்படிக்காய், எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரலோகிலே கைமாறு உண்டு

தன் வாழ்வை தேவனுடைய பணிக்கென்று அர்ப்பணித்த ஊழியர், பல கஷ்டங்கள் மத்தியிலும் சலிப்படையாமலும், முறுமுறுக்காமலும், மன மகிழ்ச்சியோடு பணியாற்றி வந்தார். அந்த ஊரிலுள்ள ஜனங்களின் வறுமை மாற வேண்டும், கஷ்டங்கள் ஒழிய வேண்டும் என்று அவர்களுக்காக வீடு வீடாகச் சென்று ஊக்கத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்து வந்தார். இவர் வழியாக பல ஜனங்கள் ஆறுதல் அடைந்தார்கள். எனினும், அந்த ஊழியர் ஜெபிக்க செல்லும் போது, சிலர் அவர் நிலையைப் பார்த்து பரிகாசம் செய்து வந்தார்கள். வேறு சிலர், "எங்களுக்கல்ல உனக்குத்தான் முதலில் ஜெபம் தேவை" என்று கேலி செய்தார்கள். இப்படியாக மனம் சோர்ந்து போகத்தக்கதான வார்த்தைகளை மனிதர்கள், எங்கள் மத்தியிலும் பேசுவதுண்டு. ஆனால் இப்படியான வார்த்தைகளால் நீங்கள் மனம் சோர்ந்து போகாதிருங்கள். சிலுவையில் தொங்கிய இயேசுவை நோக்கிப் பாருங்கள். அகோர வெய்யில், உடலெல்லாம் காயங்கள், தேற்றுவதற்கு யாருமில்லை, நிர்வாணக் கோலம், உடலில் இருக்கும் இரத்தமெல்லாம் வழிந்து ஓடுகின்றது. இந்த நிலையிலே, "அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள் நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம்பண்ணி: மற்றவர்களை ரட்சித்தான் தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை. தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே. அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்" என்றார்கள். அவை யாவற்றின் மத்தியிலும் கர்த்தர் அவர்களுக்காகவும் பிதாவிடம் வேண்டிக் கொண்டார். இயேசுவின் நாமத்தில், நாங்கள் நன்மையை நடப்பிக்கும் போது, இப்படியாக நன்றியற்ற நிந்தையான வார்த்தைகளை மனிதர்கள் கூறலாம், சோர்ந்து போகாதிருங்கள்! பரலோகத்திலே உங்களுக்கு கைமாறு மிகுதியாயிருக்கும்.

**மத்தேயு 5:11**

**என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.**

**ஜெபம்:** நீதியின் தேவனே, பல இன்னல்கள் மத்தியிலும் இயேசு உம்முடைய சித்தத்தை செய்தது போல, நானும் நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல் இருக்கும்படி உற்சாகத்தின் ஆவியைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீங்கள் முன்குறிக்கப்பட்டவர்கள்

நாம் அனைவரும் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். அதாவது, கிறிஸ்துவின் பண்புகளும், சுபாவங்களும் எங்களிலே உருவாக்கப்பட்டு, அவை எங்களில் வளர்ந்து நிறைவடைய வேண்டும். எங்களுடைய நாளாந்த வாழ்விலே கிறிஸ்துவின் சாயலில் வளர்வதெப்படி? அவருடைய சுபாவங்களில் ஒன்றை குறித்து இன்று ஆராய்ந்து பார்ப்போம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவங்களை வெறுக்கின்றார் ஆனால் பாவிகள் தங்களை பாவங்களிலிருந்து விடுதலையடையும்படி விருப்பமுள்ளவராக இருக்கின்றார். இயேசு இந்த உலகிலே வாழ்ந்த நாட்களிலே, பலதரப்பட்ட பாவ கட்டுகளில் சிக்குண்டு, சமுதாயத்தினாலே தள்ளப்பட்டவர்கள் பலரை சந்தித்தார். அவர்கள் செய்த பாவங்கள் யாவற்றையும் மன்னித்தார். இனி பாவம் செய்யாதே என்று கூறினார். அன்று மட்டுமல்ல இன்றும் எங்கள் குற்றங்களை மன்னிக்கின்றார். தம்முடைய இரக்கத்தை எங்கள் மேல் காண்பித்து வருகின்றார். ஆகவே மன்னிப்பை வழங்குவது அவருடைய சுபாவமாக இருக்கின்றது. தம்முடைய சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கும் போதும், "நாங்கள் மற்றவர்கள் எங்களுக்கு எதிராக செய்த தப்பிதங்களை மன்னிப்பது போல எங்கள் பாவங்களை மன்னித்தருளும்" என ஜெபிக்கும்படி கற்றுக் கொடுத்தார். எனவே, இயேசுவின் சாயலில் நாங்கள் வளர்ந்து நிறைவடைவதற்கு மற்றவர்கள் எங்களுக்கு எதிராக செய்யும் குற்றங்களை மன்னிக்க பழகிக் கொள்ள வேண்டும். எத்தனை தடவைகள் குற்றம் செய்தவர்களை மன்னிப்பது? எப்படிப்பட்ட குற்றங்களை மன்னிப்பது? எத்தனை தடவைகள் இயேசு உங்கள் குற்றங்களை மன்னித்திருக்கின்றார்? எத்தனை தடவைகள் இன்னும் மன்னிக்க தயை பெருத்தவராயிருக்கின்றார்? அத்தனை தடவைகள் நீங்களும் மன்னிக்க வேண்டும். எப்படி எங்கள் குற்றங்களை இயேசு மன்னிக்கின்றாரோ அப்படியே மற்றவர்கள் செய்த குற்றங்களையும் நாங்கள் மன்னிக்க வேண்டும்.

**ரோமர் 8:29**

**தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.**

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, இயேசுவின் பூரண சாயல் அடையும்படி என்னை முன்குறித்து அழைத்தீர். அந்த அழைப்பிற்கு பாத்திரனாக நான் வாழும்படிக்கு என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கற்றுத் தரும் தேவன்

கிறிஸ்துவின் சாயலை அடைவதற்கு நாங்கள் மன்னிக்க வேண்டும், மன்னித்தவைகளை மறக்கவும் பழக வேண்டும் என்பதை நாங்கள் யாவரும் ஏற்றுக் கொள்கின்றோம். இந்தக் காரியங்களை அதிக படியாக பிரசங்கங்களிலும் வேதப்படிப்புகளிலும் நாங்கள் கேட்கின்றோம். அவற்றை கேட்டுவிட்டு, மன்னிப்பு வழங்க வேண்டிய ஒரு சம்பவம் நடைபெறும் போது, மன்னிப்பை வழங்க வேண்டும் என்னும் உபதேசம் ஒரு அந்நிய காரியம் போல மாறிவிடுகின்றது. "நேரடியாக, உடனுக்கு உடன் காரியங்களை பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்" என்று பலர் பல கலகங்களை கிளப்பி விடுகின்றார்கள். இதனிமித்தம் பெலவீனமுள்ளவர்களை இடறல் படுத்தி விடுகின்றார்கள். நாங்கள் குற்றம் செய்யும் போது கர்த்தர் உடனுக்குடன் அதை தீர்த்து வைத்தால் எங்களில் யார் உயிருடன் இருக்க முடியும்? எனவே, இன்றிலிருந்து மனக் குழப்பங்கள் ஏற்படும் போது அல்லது மனதுக்கு பிரியமில்லாத காரியங்கள் நடைபெறும் போது, உடனடியாக எந்த வார்த்தைப் பிரயோகங்களையும் செய்யாமல் பொறுமையாக இருங்கள். வேதத்தை வாசியுங்கள். சங்கீதப் புத்தகத்திலுள்ள 37ம் 103ம் அதிகாரங்களை வாசியுங்கள். அதன் பொருட்டு உங்கள் வழியை கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து காத்திருங்கள். காத்திருக்கும் காலத்தில் ஜெபம் செய்யுங்கள், கர்த்தருடைய வார்த்தையை நம்பி மற்றவர்களுக்கு நன்மை செய்யுங்கள். சில வேளைகளிலே காத்திருப்பு காலம் வருடங்களாக மாறி விடலாம். தம்மை நம்பி காத்திருக்கின்றவர்களின் விஷயத்தை மறந்து போவதற்கு கர்த்தர் ஒரு மனிதன் அல்ல. அவர் உண்மையுள்ளவர். காத்திருப்புக் காலத்திலே எங்களை இயேசுவைப் போல பெரும் உள்ளம் படைத்தவர்களாக மாற்றிவிடுவார். மன்னிப்பின் மேன்மையை எங்களுக்கு கற்றுத் தருவார். அலையலையாய் வந்த பெரும் பிரச்சனைகள், கால் பெரு விரலை நனைக்கும் தண்ணீரைப் போல இருக்கும்படிக்காய் உங்கள் நிலையை உயர்த்தி விடுவார். எனவே முதலாவதாக ஒரு சிறிய காரியத்தை மன்னிக்க ஆரம்பியுங்கள். உங்கள் வாழ்விலுள்ள ஒரு சிறிய சம்பவத்தை தேவனிடம் ஒப்புக் கொடுக்க ஆரம்பியுங்கள். எங்கள் உள்ளான நல்ல நோக்கத்தை அறிகின்ற தேவன், எங்களைப் பெலப்படுத்தி இன்னும் அதிகமாக பெருகச் செய்வார்.

**சங்கீதம் 37:28**

கர்த்தர் நியாயத்தை விரும்புகிறவர். அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை.

**ஜெபம்:** கற்றுத் தந்து நடத்தும் தேவனே, நான் மற்றவர்களை மன்னித்து, உம்மை நம்பி, உம்முடைய நேரத்திற்காக காத்திருக்கும் படிக்கு கற்றுத் தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

**‘உள்ளான மனிதன்’** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்! உள்ளான மனிதன் சஞ்சிகையின் **மென்பிரதியை** எங்கள் இணையத்தளத்தில் வாசிக்கலாம். அத்துடன் அனுதின தியானம் என்ற தலைப்பின் கீழ், ஒரு **தனிப்பட்ட இணைய -த்தள பக்கமும்** பதிவேற்றப்பட்டுள்ளது. புத்தகங்களை தபால் மூலம் பெற்றுக்கொள்ள, உங்கள் முகவரியை, மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது அடுத்த பக்கத்தி லுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

மாதாந்தம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றவர்களு டனும் பகிர்ந்து கொள்ளுங்கள். கூடுமானவரை, தேவனை அறியாதவர்களுடன் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். தேவ -னுடைய ஜீவ வார்த்தைகள், அந்தந்த நாளுக்கு மட்டுப்படுத் தப்பட்டவைகளல்ல.

தற்போது கிறிஸ்தவ ஆவிக்குரிய ஐக்கியமொன்றிலும் இணைந்திருக்காவிட்டால், எங்களுடன் சேர்ந்து தேவனை ஆராதிக்கும்படியாக உங்களை வரவேற்கின்றோம்.

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வள வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

முகவரி ADDRESS:

நகரம் CITY:

தபால் குறியீடு POSTAL CODE:

மாநிலம் PROVINCE:

தொலைபேசி TELEPHONE:

மின் அஞ்சல் E-MAIL:

விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9
www.gtachurchnet.ca ☎ 416.613.2909